விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 140 வள்ளுவர் ஆண்டு 2056 சித்திரை 25 வியாழக்கிழமை (08.05.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



சென்னை வெற்றி
பக்கம் 4

# கூட்டணி அமைக்கும் எண்ணம் இல்லை



## ரில்வின் சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

மக்களால் நிராகரிக்கப்பட்ட எந்தவொரு தரப்பினருடனும் கைகோர்த்து உள்ளூராட்சி மன்றங்களை ஸ்தாபிக்கப் போவதில்லை என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் இளைஞனின் சடலம் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பச்சைப் புல் மோட்டை ஏரிப்பகுதியில் இளைஞன் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இதில் புதுமாத்தளன்

15ஆம் பக்கம் பார்க்க

## மாதகலில் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

மாதகல் விபுலானந்தர் வீதியில் நபர் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இதில் அதே பகுதியைச்

15ஆம் பக்கம் பார்க்க

## உலக வங்கித் தலைவருடன் ஜனாதிபதி கலந்துரையாடல்



(கொழும்பு)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கும் உலக வங்கியின் தலைவர் அஜே பங்காவுக்கும் இடையில் நேற்று சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி தனது 'X' கணக்கில் பதிவொன்றை வெளியிட்டு

15ஆம் பக்கம் பார்க்க

## அரசுக்கு எதிராக வலுவான பொது எதிரணியை உருவாக்குவேன்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

சகல எதிர்க்கட்சிகளையும் ஓரணியில் திரட்டி அரசுக்கு எதிராகப் பொது எதிரணியை உருவாக்குவேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளின் பின்னர் நேற்று புதன்கிழமை விசேட அறிவிப்பை வெளியிட்டபோதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும்

15ஆம் பக்கம் பார்க்க

### இந்திய - பாகிஸ்தான் யுத்தம் ஆரம்பம்

## இந்திய ஆயுதப் படைகள் பாகிஸ்தானில் குண்டு மழை

### பாகிஸ்தானும் பதில் தாக்குதல்



(டில்லி)

"ஒப்பரேஷன் சிந்தூர்" எனும் பெயரில் இந்திய ஆயுதப் படைகள் பாகிஸ்தானின் பயங்கரவாதிகளை இலக்கு வைத்து தொடர்

15ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.மாநகர சபையை ஆட்சியமைப்பது யார்?

### மேயர் தெரிவில் இழுபறி ஏற்படலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையில் எந்தவொரு கட்சியும் பெரும்பான்மை பெறாத நிலையில் யார் ஆட்சியமைப்பார்கள் என்ற கேள்வி எழுந்துள்ளது.

மேலும் யாழ்.மாநகர சபை மேயர் தெரிவிலும் இழுபறி நிலவலாம் என்று தெரியவருகிறது.

யாழ்.மாநகர சபையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போனஸ் ஆசனங்

15ஆம் பக்கம் பார்க்க

## மின்னல் தாக்கியதில் விவசாயி உயிரிழப்பு

### புதுக்குடியிருப்பில் சம்பவம்

(முல்லைத்தீவு)

வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோது மின்னல் தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கள்ளியடி வயல் பகுதியில் நேற்று இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த அருமைநாயகம் யசோதரன் (வயது-42) என்பவரே உயிரிழந்தவராவார்.

15ஆம் பக்கம் பார்க்க

## வடமராட்சியில் கடலுக்கு சென்ற இருவர் மாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சி திக்கம் கடற்பரப்பில் தொழிலுக்குச் சென்ற இரு நபர்கள் கரை திரும்பவில்லை.

நேற்று முன்தினம் அதிகாலை தூண்டில் தொழிலுக்

15ஆம் பக்கம் பார்க்க

## நான்கு நாள் காய்ச்சல் பல்கலை மாணவன் மரணம்

### புலோலி தெற்கில் சம்பவம்

(கரணவாய்)

நான்கு நாள் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்த பல்கலைக்கழக மாணவர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் புலோலி தெற்கைச் சேர்ந்த மாலபே பல்கலைக்கழக மாணவனான பரந்தாமன் லக்சன் (வயது-21) என்பவரே உயிரிழந்தவராவார்.

மேற்படி மாணவனுக்கு நான்கு நாள் காய்ச்சல் ஏற்பட்டதாகவும் நேற்று புதன்கிழமை பிற்பகல் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு

15ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பொலநறுவையில் வேட்பாளரின் மோ.சைக்கிள் தீ வைத்து எரிப்பு

## இளைஞன் கைதாகி மறியல்

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பொலநறுவை மாநகர சபையில் போட்டியிட்ட வேட்பாளர் ஒருவரின் மோட்டார் சைக்கிளை தீ வைத்து எரித்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இளைஞனை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பொலநறுவை நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (06) உத்தரவிட்டுள்ளது.

பொலநறுவை 28 ஆவது மைல்கல் பிரதேசத்தில் வசிக்கும் 35 வயதுடைய இளைஞனே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரான இளைஞன் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பொலநறுவை மாநகர சபையில் போட்டியிட்ட வேட்பாளர் ஒருவரின் வீட்டிற்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை தீ வைத்துவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இந்தச் சம்பவத்தின் போது வேட்பாளரின் வீட்டில் அவரது மனைவியும் பிள்ளைகளும் மாத்திரமே இருந்துள்ளனர்.

இதனையடுத்து பிரதேசவாசிகள் சிலர் இணைந்து தீப் பரவலைக் கட்டுப்படுத்தியுள்ளனர்.

எவ்வாறிருப்பினும், மோட்டார் சைக்கிள் மற்றும் அதற்கு அருகில் இருந்த பெறுமதியான பொருட்கள் முழுவதுமாக தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

இதனையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ம-4,7)

### அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்ள

# எந்தவொரு பயங்கரவாத செயலையும் அரசு செய்யும்

## ரஞ்சித் மத்தும பண்டார

மக்கள் விடுதலை முன்னணியினரை ஜனநாயக கட்டமைப்பிற்குள் நுழைய ஜே.ஆர்.ஜயவர்தனவும், ரணசிங்க பிரேமதாசாவும் அன்று அனுமதித்தனர். இருப்பினும், அவர்களின் தற்போதைய நடவடிக்கைகளைப் பார்க்கும்போது அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ள எந்தவொரு பயங்கரவாதச் செயலையும் செய்யும் என்ற சந்தேகம் ஏற்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமை அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை (7) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே ரஞ்சித் மத்தும பண்டார மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் ஊடாக அரசாங்கம் தொடர்பான தங்கள் அதிருப்தியை மக்கள் வெளிப்படுத்தியுள்ளனர். அரசாங்கம் அமைக்கப்பட்டு சுமார் 5 மாதங்களுக்குப் பிறகு நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில், மக்கள் அரசாங்கத்தை நிராகரித்துவிட்ட நிலைமையே வெளிப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் வாக்கு விகிதம் பெரிதாக வீழ்ச்சி கண்டுள்ளது. கடந்த பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி 68 இலட்சம் வாக்குகளைப் பெற்றது. ஆனால் உள்ளூராட்சித் மன்றத் தேர்தலில் பெரும் சரிவு ஏற்பட்டுள்ளது. பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி 62 சதவீத வாக்குகளைப் பெற்றது. இருப்பினும், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் வாக்கு 43 சதவீதமாகக் குறைந்துள்ளன.

நாட்டின் ஜனநாயகத்தை இல்லாதொழிக்க அரசாங்கம் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. தேர்தல் விதிகள் மீறப்பட்டுள்ளன. நாட்டின் பிரதமர் கூட தேர்தல் சட்டங்களை மீறுமாறு மக்களுக்குப் பகிரங்கமாக அறிவுறுத்தினார். நாட்டில் ஜனநாயக தேர்தல்களை நடத்த நடவடிக்கை எடுப்பதாக அரசாங்கம் அறிவித்தது. எவ்வாறாயினும், களுத்துறையில் ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் ஒருவர் சுடப்பட்டுள்ளார். தெரணியகலவில் ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டுள்ளார். அரசாங்கம் இதுபோன்ற வன்முறைச் செயல்களில் ஈடுபட்டுள்ளது. அதிகாரத்தைத் தக்க வைத்துக்கொள்ள அரசாங்கம் எந்தவொரு பயங்கரவாதச் செயலையும் மேற்கொள்ளும்.

மக்கள் விடுதலை முன்னணியினரை ஜனநாயக கட்டமைப்பிற்குள் நுழைய ஜே.ஆர். ஜயவர்தனவும், ரணசிங்க பிரேமதாசாவும் அனுமதித்தனர். இருப்பினும், தற்போதைய ஜனாதிபதி மற்றும் பிரதமரின் நடவடிக்கைகளைப் பார்க்கும்போது, அரசாங்கத்தின் வாக்குப் பலம் குறைந்துபோயுள்ளது. அரசாங்கம் மீண்டும் பயங்கரவாதத்தின் மூலம் நாட்டை ஆட்சி செய்யுமா என்ற சந்தேகம் எழுகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (ம-4,7)

## சித்திரத்தேர் வெள்ளோட்டம்

(ஏழாலை)

ஏழாலை அத்தியடி முருகமூர்த்தி ஆலயத்தின் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழாவானது நாளை வெள்ளிக்கிழமை காலை 11.30 மணி தொடக்கம் மதியம் 1.30 மணிவரையிலுள்ள சுப வேளையில் பக்திபூர்வமாக இடம்பெறவுள்ளது. (ம-4,7)

# யானை தாக்கியதில் யுவதி ஒருவர் படுகாயம்

(அநுராதபுரம்)

அநுராதபுரம், அளுத்வெவ பிரதேசத்தில் காட்டு யானை தாக்கி யுவதி ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று புதன்கிழமை (07) காலை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

அநுராதபுரம், அளுத்வெவ பகுதியில் அமைந்துள்ள வீடொன்றிற்கு பின்புறத்தில் உள்ள குழியில் காட்டு யானை ஒன்று விழுந்துள்ளது.

பின்னர் பிரதேசவாசிகள் சிலர் இணைந்து குழியில் விழுந்த காட்டு யானையை காப்பாற்றியுள்ளனர்.

இதன்போது திடீரென குழப்பமடைந்த யானை வீதியில் பயணித்த யுவதி ஒருவரை பலமாகத் தாக்கியுள்ளது.

காயமடைந்த யுவதி சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-4,7)

# மரண அறிவித்தல்

மண்ணக வாழ்வு 22 - 02 - 1948



விண்ணக வாழ்வு 06 - 05 - 2025

## திருமதி சுகிர்தம் மரியநாயகி மரியநாயகம்

நெல்லியடி கரவெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுகிர்தம் மரியநாயகி மரியநாயகம் அவர்கள் 06.05.2025 அன்று இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சவரிமுத்து மனுவேற்பிள்ளை - இசபெல்லா தம்பதிகளின் ஏகபுத்திரியும் இளவாலையைச் சேர்ந்த திருச்செல்வம் - திரேசம்மா தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற திருச்செல்வம் அலோசியஸ் மரியநாயகம்(ஓய்வு நிலை உத்தியோகத்தர், இலங்கை புகையிரத சேவை) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற Dr.மங்களநாயகம்(சுவீடன்) மற்றும் மதுரநாயகம் (பிரான்ஸ்), தேவநாயகம் (அமெரிக்கா), மன்மதநாயகம்(மன்னண்ணா சமாதான நீதவான்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் லேனா மங்களநாயகம் (சுவீடன்), ஞானமணி, மதுரநாயகம்(பிரான்ஸ்), மேரிமகடலின் மலர் தேவநாயகம் (அமெரிக்கா), டொறின் மன்மதநாயகம் (ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர், வடமராட்சி வலயம்), காலஞ்சென்றவர்களான ஜேசுரட்ணம், மங்களநாதன் மற்றும் மதுரநாயகி(லண்டன்) அருட்பணி தேவராஜன் காலஞ்சென்ற அமிர்தராணி மற்றும் தர்மபாலன்(லண்டன்), தேவமனோகரன் ஆகியோரின் மைத்துனியும் ரணியா, நினா, மனோஜா, எட்வின், மனோஜ்குமார், தனுஜா, யூஜின், டிலக்சன், டிலோஜன், யூட் தவசெல்வன், மதிவதனி, யாழினி, ரூபன், நிலோஜினி, அமலாஜினி ஆகியோரின் அன்பு மாமியாரும் தினோசன், தர்சனா ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதி வழிபாடுகள் இன்று 08.05.2025 வியாழக்கிழமை பி.ப 3.00 மணியளவில் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் கரவெட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : திரு. மன்மதநாயகம்(மன்னண்ணா)
சகோதரன் : 077 026 7711

(C-2920)

# 24 வது பிறந்தநாள் நினைவலைகள்



அமரர் அருளானந்தம் சாருயன்

தோற்றம் 08.05.2001 மறைவு 28.11.2023

சாருயனே, இன்று உன் பிறந்த நாள்...
ஆனால் விழிகள் இமையாது நனைகின்றன.
நீ இல்லையெனினும், நம் நெஞ்சம்கொண்ட உறவாக,
இதயத்தில் நீ என்றும் உயிராய் வாழ்கிறாய்.

வீட்டின் ஒளிவிளக்காய் நீ இருந்தாய்,
வாழ்வின் ஓரங்களில் தீபமாகத் தென்பட்டாய்.
இன்று விண்மீனாய் வானத்தில் ஜொலிக்கிறாய்,
பிரிந்தாலும், நம் சுவாசத்தில் நீ இருக்கிறாய்...

உன் மரணம் ஒரு முடிவல்ல,
ஒரு மாறிய பயணம்தான் – நினைவுகளின் வழியாக.
உன் ஒவ்வொரு சிரிப்பும் நம் இருள் அகற்றும் ஒளியாக,
நம்மை வழிநடத்தும் பிரகாசமாக மாறுகின்றது.

இன்று உன் பிறந்த நாளில் பூக்கள் இல்லை,
ஆனால் அன்பும் கண்ணீரும் கலந்த மலர்வணக்கம் உண்டு.
உன் பெயரை நாங்கள் மௌனமாக சொன்னாலும்,
உன் நினைவை நாங்கள் உயிரோடு வாழ்த்துகிறோம்....

குடும்பத்தினர்

(C-2921)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘ஆப்ரேஷன் சிந்தூர்’ தாக்குதலை ஆரம்பித்தது இந்தியா!

## 80 இற்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் பலி

(டில்லி)

**பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் முழுவதும் உள்ள பயங்கரவாத முகாம்கள் மீது இந்திய ஆயுதப் படைகள் நேற்று புதன்கிழமை அதிகாலை நடத்திய ‘ஆப்ரேஷன் சிந்தூர்’ என்னும் தொடர் துல்லியத் தாக்குதல்களில் 80 இற்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாக அந்நாட்டு உயர் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.**





ஏப்ரல் 22 ஆம் திகதி பஹல்காமில் 26 பொது மக்கள் கொல்லப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பதிலடியாக இந்தியா, தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புகளான ஜெய்ஷ்-இ-மொஹமட், லஷ்கர்-இ-தொய்பா மற்றும் ஹிஸ்புல் முஜாஹிதீன் ஆகியவற்றுடன் தொடர்புடைய ஒன்பது தளங்களை எல்லை தாண்டிய நடவடிக்கை குறி வைத்தது.

இந்திய மூத்த அதிகாரிகளின் கூற்றுப்படி, ஜெய்ஷ்-இ-மொஹமட் அமைப்பின் கோட்டையான பஹாவல்பூர் மற்றும் முரிட்கே ஆகிய இடங்களில் இரண்டு பெரிய தாக்குதல்கள் நடத்தப்பட்டன.இதில் ஒவ்வொரு தளத்திலும் சுமார் 25-30 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

முரிட்கேவில், இலக்காக இருந்த மஸ்ஜித் வா மர்காஸ் தைபா, எல்.இ.டி.யின் நரம்பு மையம் மற்றும் சித்தாந்த தலைமையகம், இது நீண்ட காலமாக பாகிஸ்தானின் “பயங்கரவாத நாற்றங்கால்” என்று கருதப்படுகிறது. ஆரம்ப மதிப்பீடுகளின்படி மொத்தம் 80 முதல் 90 பயங்கரவாதிகள் வரை கொல்லப்பட்டனர். (நி-8)

## ரஷ்யா மீது உக்ரைன் ட்ரோன் தாக்குதல் விமான சேவைகள் நிறுத்தம்

(மொஸ்கோ)

ரஷ்யா மீது உக்ரைன் நடத்தியுள்ள ட்ரோன் தாக்குதலைத் தொடர்ந்து ரஷ்யாவில் விமான சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் உலகப் போரில் சோவியத் யூனியன் மற்றும் அதன் நட்பு நாடுகளின் வெற்றியின் 80 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், அதன் கொண்டாட்டங்கள் ரஷ்யாவின் மொஸ்கோவில் இன்று முதல் நடைபெற உள்ளன. இதையடுத்து, உக்ரைனுடனான போரில் மூன்று நாள் போர் நிறுத்தத்தை ரஷ்ய ஜனாதிபதி புடின் அறிவித்திருந்தார்.

இப் போர்நிறுத்தம் மே 8ஆம் திகதி தொடக்கத்தில் இருந்து மே 10ஆம் திகதி இறுதி வரை, அதாவது 72 மணி நேரம் நீடிக்கும் என ரஷ்ய ஜனாதிபதி மாளிகை தெரிவித்திருந்தது. மேலும் இந்த போர் நிறுத்தத்தை ஏற்கும்படி உக்ரைனுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த போர் நிறுத்தத்தை உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி ஏற்க மறுத்த நிலையில், அந்நாடு தற்போது ரஷ்யா மீது ட்ரோன் தாக்குதலை நடத்தியுள்ளது.

இந்த நிலையில், கடந்த இரண்டு நாட்களாக ரஷ்யாவின் பல்வேறு நகரங்களின் மீது உக்ரைன் நடத்திய ட்ரோன்கள் தாக்குதல் காரணமாக ரஷ்ய தலைநகர். மொஸ்கோவிலுள்ள 4 விமான நிலையங்களிலும் விமானச் சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக அந்நாட்டுப் பாதுகாப்புத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.



இதனால், இருநாடுகளின் எல்லையிலுள்ள பகுதிகள் மற்றும் ரஷ்யாவின் மத்திய பகுதிகளிலும் உள்ள விமான நிலையங்களில் விமானப் போக்குவரத்து தற்காலிகமாகத் துண்டிக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதல்களினால் ரஷ்யாவின் குர்ஸ்க் மாகாணத்தில் 2 பேர் படுகாயமடைந்து உள்ளதாகவும் வோரோனெஸ் மாகாணத்தின் சில பகுதிகள் கடுமையான பாதிப்புக்குள்ளாகியதாகவும் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## இந்தியா-பாகிஸ்தான் பதற்றம் பல விமான சேவைகள் இரத்து

(டில்லி)

ஏர் இந்தியா மற்றும் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமான நிறுவனங்கள் நாட்டின் சில இடங்களுக்குச் செல்லும் அனைத்து விமானங்களையும் இரத்து செய்தன.

பாகிஸ்தான் பயங்கரவாத முகாம்கள் மீது இந்திய இராணுவம் நடத்திய துல்லியமான தாக்குதல்களைத் தொடர்ந்து இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே தொடர்ந்து பதற்றங்கள் நிலவி வரும் நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜம்மு, ஸ்ரீநகர், லே, ஜோத்பூர், அமிர்தசரஸ், பூஜ், ஜாம்நகர், சண்டிகர் மற்றும் ராஜ்கோட் ஆகிய இடங்களிலிருந்து வரும் விமானங்கள் மறு அறிவிப்பு மற்றும் அதிகாரிகளிடமிருந்து புதுப்பிப்புகள் வரும் வரை சேவைகள் இரத்து செய்யப்படும் என்று விமான நிறுவனங்கள் சமூக ஊடகமான எக்ஸ் தளத்தில் தெரிவித்துள்ளன.





இது குறித்து ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமான நிறுவனம் சமூக ஊடகமான எக்ஸ் தளத்தில் ஒரு பதிவில், சிரமத்திற்கு வருந்துவதாகவும் விருந்தினர்கள் தங்கள் விமான நிலையை உறுதிப்படுத்துமாறும் கேட்டுக்கொண்டது.

இதற்கிடையில், ஸ்பைஸ்ஜெட் விமான நிறுவனங்கள் நாட்டின் வடக்குப் பகுதிகளில் உள்ள விமான நிலையங்களுக்கான விமான ஆலோசனையை வெளியிட்டன.

பயணிகள் தங்கள் பயணத்தைத் திட்டமிட்டு, பறப்பதற்கு முன் தங்கள் விமான நிலையைச் சரிபார்க்குமாறும் விமான நிறுவனங்கள் கேட்டுக் கொண்டுள்ளன. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோனி ‘சிக்ஸர்’ சென்னை ‘சுப்பர்’



- அதிர்ச்சித் தோல்விகளிலிருந்து ‘மீட்சி’ பெற்றது
- கொல்கத்தாவின் பிளே – ஓப்புக்கு ‘கல்தா’ கொடுத்தது

தனது ராசியான ஈடன் கார்டன் மைதானத்தில் தோனி சிக்சர் விளாச, சென்னை அணி 8 விக்கெட்டுக்க்ள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. கொல்கத்தா அணி "பிளே-ஓப்" வாய்ப்பை இழந்தது.

கொல்கத்தா, ஈடன் கார்டன் மைதானத்தில் நடந்த இந்தியன் பிரிமியர் லீக் போட்டியில் "நடப்பு சம்பியன" கொல்கத்தா - சென்னை அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணித் தலைவர் ரகானே துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார்.

**ரசல் விளாசல்:**

கொல்கத்தா அணிக்கு குர்பாஸ் (11) ஏமாற்றினார். அணித் தலைவர் ரகானே (48), சுனில் நரைன் (26) ஓரளவு கைகொடுத்தனர். ஜடேஜா வீசிய 15வது ஓவரில் 2 பவுண்டரிகள், ஒரு சிக்சர் அடித்த ரசல் (38), நூர் அகமது பந்தில் ஆட்டமிழந்தார். பதிரான பந்தை சிக்சருக்கு அனுப்பிய மணிஷ் பாண்டே, நூர் அகமது பந்தில் ஒரு பவுண்டரி விரட்டினார்.

20 ஓவர்கள் நிறைவில் கொல்கத்தா அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 179 ஓட்டங்களை எடுத்தது. மணிஷ் (36), ராமன்தீப் சிங் (4) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**உர்வில் ஆறுதல்:**

சென்னை அணிக்கு ஆயுஷ் மாத்ரே (0), கான்வே (0) ஏமாற்றினர். மொயீன் அலி வீசிய 2வது ஓவரில், 2 சிக்சர்கள், ஒரு பவுண்டரி விரட்டிய உர்வில் படேல் (31 ஓட்., 4 சிக்சர்கள், ஒரு பவுண்டரி), ஹர்ஷித் ராணாவிடம் சரணடைந்தார். அஷ்வின் (8), ரவிந்திர ஜடேஜா (19) நிலைக்கவில்லை.

சென்னை அணி ஒரு கட்டத்தில் 5 விக்கெட்டுக்களை இழந்து வெறும் 60 ஓட்டங்களை மாத்திரமே எடுத்திருந்தது.

**பிரவிஸ் அபாரம்:**

பின் இணைந்த பிரவிஸ், ஷிவம் துபே ஜோடி அணியை மீட்டது. வைபவ் அரோரா வீசிய 11வது ஓவரில் 3 சிக்சர்கள், 3 பவுண்டரிகள் அடித்த பிரவிஸ், 22 பந்துகளில் அரைச்சதம் எட்டினார். ஆறாவது விக்கெட்டுக்காக 67 ஓட்டங்கள் சேர்த்த போது வருண் பந்தில் பிரவிஸ் (52) ஆட்டமிழந்தார். ஹர்ஷித் பந்தை சிக்சருக்கு அனுப்பிய துபே, ரசல் பந்தில் ஒரு பவுண்டரி அடித்தார். வைபவ் அரோரா வீசிய 19வது ஓவரில் துபே (45), நூர் அகமது (2) ஆட்டமிழந்தனர்.

**தோனி "சிக்சர்"**

கடைசி ஓவரில் சென்னையின் வெற்றிக்கு 8 ஓட்டங்கள் தேவைப்பட்டது. ரசல் பந்து வீசினார். 43 வயதான தோனி, முதல் பந்தை சிக்சருக்கு அனுப்பி ரசிகர்களை உற்சாகப் படுத்தினார். நான்காவது பந்தை பவுண்டரிக்கு விரட்டிய அன்சுல் கம்போஜ் வெற்றியை உறுதி செய்தார்.

சென்னை அணி 19.4 ஓவர்க்ளில் 8 விக்கெட்டுக்களை இழந்து 183 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. தோனி (17), கம்போஜ் (4) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

தனது கடைசி 2 போட்டியில் வென்றால் கூட 15 புள்ளி தான் பெறும் என்பதால் கொல்கத்தாவின் பிளே-ஓப் வாய்ப்பு கிட்டத்தட்ட முடிவுக்கு வந்தது. (ம-4,7)

### தோனி "200"

நரைன், ரகுவன்ஷியை அவுட்டாக்க உதவிய சென்னை அணித் தலைவர் தோனி, இந்தியன் பிரிமியர் லீக் அரங்கில் 200 விக்கெட்டுக்கள் வீழ்ச்சிக்கு வித்திட்ட முதல் விக்கெட் கீப்பரானார். இதுவரை 276 போட்டிகளில், 153 "கேட்ச்", 47 "ஸ்டம்பிங்" உட்பட 200 விக்கெட் விழக் காரணமாக இருந்துள்ளார். அடுத்த இரு இடங்களில் தினேஷ் கார்த்திக் (174 விக்.,), விரிதிமன் சகா (111) உள்ளனர்.

# கால்பந்தில் ஹாரிகேன் போல கோலி சாபத்தை முறியடிப்பாரா?

## ரசிகர்கள் எதிர்பார்ப்பு



பாயர்ன் முனிச் அணி சம்பியன் பட்டம் வென்றதன் மூலம், இங்கிலாந்தின் ஹாரி கேன் தனது முதல் டிராபியை கைப்பற்றினார்.

பண்டஸ்லிகா கால்பந்து போட்டியில் பாயர்ன் முனிச் மற்றும் ஆர்பி லேப்ஜிக் அணிகள் மோதின. இப்போட்டி 3-3 என்ற கோல் கணக்கில் டிராவில் முடிந்தது.

எனினும் புள்ளிகள் கணக்கில் பாயர்ன் முனிச் சாம்பியன் ஆனது. இது பாயர்ன் அணிக்கு 33 ஆவது மற்றும் நட்சத்திர வீரர் தாமஸ் முல்லருக்கு 13 ஆவது பண்டஸ் லிகா சம்பியன் பட்டம் ஆகும்.

ஆனால், இங்கிலாந்தின் கால்பந்து தேசிய அணித்தலைவர் ஹாரி கேனுக்கு இதுதான் முதல் சம்பியன் பட்டம்.

2010 முதல் 2023 வரை டோட்டன் ஹாம் ஹாட்ஸ்பர் அணிக்காக, 317 போட்டிகளில் விளையாடிய ஹாரி கேனால் ஒரு முறை கூட சம்பியன் பட்டத்தை வென்று தரமுடியவில்லை.

பாயர்ன் முனிச் அணியில் நுழைந்தது முதல் மிரட்டலான ஆட்டத்தை வெளிப் படுத்தி, பல போட்டிகளில் அணியை வெற்றி பெற வைத்தார் ஹாரி கேன்.

அவரது அபார செயல்திறனின் இறுதியாக, பாயர்ன் அணியுடன் தனது முதல் பட்டத்தை சூட்டியுள்ளார். இதன்மூலம் பட்டம் பெற முடியாத தனது நீண்டகால சாபத்திற்கு ஹாரி முற்றுப்புள்ளி வைத்தார். கால்பந்தில் ஹாரி கேன் போலவே ஐ.பி.எல் கிரிக்கெட்டில் விராட் கோலி இருக்கிறார். 17 சீசன்களாக ஆர்.சி.பி அணிக்காக விளையாடிவரும் விராட் கோலி இதுவரை ஒருமுறை கூட ஐ.பி.எல் கோப்பையை வெல்ல முடியவில்லை.

இந்தாண்டு சிறப்பாக விளையாடிவரும் ஆர்.சி.பி அணி ஹாரிகேன் போலவே கோலியும் கோப்பையை வென்று சாபத்தை முறியடிப்பார் என கோலி ரசிகர்கள் மிகுந்த எதிர்பார்ப்பில் இருக்கிறார்கள். (6-8)

# ஹார்த்திக், நெஹ்ராவுக்கு அபராதம்

ஐ.பி.எல் நெறிமுறைகளை மீறிய ஹர்திக் பாண்டியா, குஜராத் அணியின் தலைமைப் பயிற்சியாளர் ஆஷிஷ் நெஹ்ரா ஆகியோருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

நடப்பு ஐ.பி.எல் தொடரில் நேற்று முன்தினம் இரவு அகமதாபாத்தில் நடைபெற்ற குஜராத் - மும்பைக்கு எதிரான மழையால் பாதிக்கப்பட்ட பரபரப்பான போட்டியில் குஜராத் அணி த்ரில் வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியில் மெதுவாக பந்துவீசியதாகக் கூறி மும்பை அணி கப்டன் ஹர்திக் பாண்டியாவுக்கும் போட்டியின் நெறிமுறைகளை மீறியதாகக் கூறி குஜராத் பயிற்சியாளர் நெஹ்ராவுக்கும் அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது.

மெதுவாகப் பந்துவீசிய தற்காக ஹர்திக் பாண்டி யாவுக்கு போட்டிக் கட்டணத்தில் இருந்து ரூ.24 லட்சம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

நெஹ்ராவுக்கு போட்டிக் கட்டணத்தில் இருந்து 25 சதவிகிதம் அபராதமும் ஒரு தகுதியிழப்பு புள்ளியும் வழங்கப்பட்டது.

அவர் ஐ.பி.எல் விதி 2.20 இன் கீழ் லெவல் 1 குற்றத்தை ஒப்புக் கொண்டார். இதனால், களநடுவரின் தீர்ப்பே போதுமானதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. (6-8)

## இன்றைய ஆட்டங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவு வைத்தியசாலைக்கு 776 வழித்தடப் பேருந்து சேவையில்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு பிரதேச வைத்தியசாலைக்குச் சென்று வருவதற்கான பேருந்து சேவை கடந்த 1 ஆம் திகதி முதல் ஆரம்பமாகியுள்ளது.

இதற்கு முன்னர், வைத்தியசாலைக்கு நேரடியாகச் செல்லும் பேருந்து சேவை இல்லாததால், பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர். இந்த நிலையை மாற்றும் நோக்கில், புங்குடுதீவு தனியார் பேருந்து இலக்கம் 776 உடன் தொடர்புடைய போக்கு வரத்து சங்கத்தின் தலைவருக்கு பலமுறை வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அந்த வேண்டுகோளை ஏற்று, காலை 7.40 மணிக்கு இறுப்பிட்டி பிரதேசத்திலிருந்து ஆரம்பமாகி இந்த புதிய பேருந்து சேவை, புங்குடுதீவு வைத்தியசாலையை அடைந்து பின்னர் யாழ்ப்பாண நகரத்தை நோக்கி செல்லும்.

அதேபோல், நண்பகல் 12 மணிக்கு யாழில் இருந்து புறப்படும் பேருந்து, புங்குடுதீவு வைத்தியசாலை வழியாகச் சென்று இறுப்பிட்டி பகுதிக்குச் செல்லும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-8)

# 323 கிலோ கஞ்சாவுடன் யாழில் மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழில் பெருந்தொகை கஞ்சா போதைப்பொருளுடன் மூவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எழுவைதீவு கடற்பகுதியில் வைத்து 323 கிலோகிராம் கஞ்சா போதைப்பொருளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் பேசாலை என்றும் ஏனைய இருவரும் குருநகர் பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரிவித்த பொலிஸார் மூவரிடமும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (6-8-33)

# புதிதாக சின்னங்கள் வரைந்து வாக்களிப்பு

(சாவகச்சேரி)

வாக்குச்சீட்டில் புதிதாக தாமே சின்னம் ஒன்றைக் கீறி அதற்கு புள்ளடியிட்டு வாக்களித்த சம்பவங்கள் நேற்று முன்தினம் நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இடம்பெற்றுள்ளன.

நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட தகுதியெனத் தேர்தல் திணைக்களத்தால் தீர்மானிக்கப்பட்ட கட்சிகள் மற்றும் சுயேட்சை அணிகளை புறந்தள்ளி வாக்குச்சீட்டில் புதிதாக சின்னங்களை வரைந்து அதற்கு வாக்களித்திருந்ததனை நிராகரிக்கப்பட்ட வாக்குச் சீட்டுக்களை கட்சி முகவர்களுக்கு காண்பிக்கும் போதே குறித்த சம்பவத்தினை அவதானிக்க முடிந்தது.

அதனை விட மேலும் சிலர் வாக்குச் சீட்டில் அனைத்து கட்சிகளையும் ஆதரித்த மற்றும் நிராகரித்த சம்பவங்களும் நிகழ்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது (6-8-30)


## மக்கள் வங்கி
## பிராந்திய தலைமைக் காரியாலயம் - யாழ்ப்பாணம்

மக்கள் வங்கி யாழ்ப்பாணம் பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/ சேவை மையங்களில் 29.02.2024 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 27.05.2025 திகதி வரை மீட்டெடுக்கப்படாத /புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடத்தில் காலை 8.30 மணிக்கு தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் தினங்கள் - 28.05.2025 மற்றும் 29.05.2025**

| ஏல விற்பனை நிகழும் இடம் | யாழ் ஸ்ரான்லி வீதிக்கிளை |
|---|---|
| கிளைகள் | யாழ்/ ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ்/ பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ்/ பல்கலைக்கழகம், யாழ்/ கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம் |
| சேவை நிலையங்கள் | மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), மல்லாகம், காங்கேசன்துறை, உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்யவும், ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்றவும், ஒன்றிணைத்துச் செயல்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர், பிராந்திய தலைமைக் காரியாலயம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே.இல : 021-222 2601 : 021-222 2602**

(C-2915)

PEOPLE'S BANK
Pride of the Nation



பருத்தித்துறை - மாதனையில்
இன்று (08.05.2025)

வற்றாத நலமளிக்கும் வாழ்வுக்கு வரமளிக்கும்
வெற்றி விநாயகனின்



# தேரோட்டம்



வானத்துப் பூக்களென வட்டமிடும் வெண்முகில்கள்
தானசைந்தே பன்னீராய் நீர்தூவி
வானமுதத் தென்றலொடு கலந்தே சிரித்து
தெய்வீக நாளிதென்று மகிழ்ந்திருக்க
சித்திரையாள் இந்நாள் பொன்னாள் ஆனதென்று
சித்தமுடன் கைகூப்பிக் காத்திருக்க,
மெத்தவெழும் கதிரின்றி மென்கரங்கள் நீட்டியே
மேலெழுந்த கதிரவனும் பார்த்திருக்க,
சித்தமுடன் பிள்ளையார் ஊர்கோலம் போகின்ற
சித்திரையின் காட்சிதனைக் காண்பதற்கே
சுத்தமெனும் உள்ளமொடு ஊரார்கள் திரண்டே
சுகமான ஆவலுடன் காத்திருக்க;

எழிலேந்து வண்ணச் சித்திரங்கள் எங்ஙனுமே
களிகூர வமைந்து ஓவியமாய்
அழியாத கைவண்ணம் இயம்புகின்ற காவியமாய்
விழிநீங்க முடியாத தோற்றமதாய்
ஒளிமின்னும் தங்க ரதமென்னும் தேரினிலே
ஒய்யார அலங்காரக் கணபதிதான்
குளிர்சோலை யாகவளி வீசுகின்ற
வீதிதனில் சிறப்போடு உலாவரும் நாளின்று!

அங்கயற் கண்ணிக்கு மூத்த பிள்ளையாய்
அழகன் முருகனுக்கு அண்ணனாய்
பங்கயம் முல்லைமலர் அறுகும் எருக்கலையும்
கமழ்ந்திடும் நறுமண மாலையொடு
மங்காப் புகழுடைய மாதனை வயலமர்ந்த
சிந்துமுயர் சிற்பக் கோயிலின்
சுந்தர விநாயக சிங்கார சொரூபனை
சிந்திப்போர் உய்வடையும் நாளிதுவாய்,
சோதனை துன்ப துயரங்கள் தீர்த்திடவே
வேழமுகத்து வெற்றித் திருமகன்
சோதியாய் எழுந்திங்கு வரமருளும் நாளின்று,
விக்கினங்கள் தொலைந்திடும் பேறின்று!

ஆதார மாகுமவன் அரும்பாத கமலமென
மாதர்கள் தேரின்பின் அடியழிக்க
சாதிப்போம் என்றுதவில் நாதஸ்வரம் முழங்கும்
சங்கீத சாகரத்தில் மக்களுமாய்
ஓதிடும் தேவாரப் பாவாணர் இசையுடனே
ஒப்பிலாப் பக்திதவழ் சூழலிலே
பேதமிலாத் தொண்டர்கள் இழுத்திட அசைந்துவரும்
பெருமான் கற்பகத்தான் தேர்காண்போம்...!!

08.05.2025 இரா.தில்லைராஜன்


# இராசிபலன்

08.05.2025
சித்திரை 25, வியாழக்கிழமை
ஏகாதசி பிற்பகல் 3.06 மணிவரை
உத்தரம் முன்னிரவு 11.17 மணிவரை

சுபநேரம் 7.25 -8.55 மணிவரை
இராகுகாலம் 1.25 - 2.55 மணிவரை
ஏகாதசி விரதம்

சந்திராஷ்டமம் - அவிட்டம் சதயம்

வள்ளவன்

**மேஷம்** — தேக நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், செய்தொழில் மேன்மையுண்டு, தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், கௌரவமான நாள்.

**கடகம்** — கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், வழிபாட்டு சிந்தனை மேலோங்கும் நாள்.

**துலாம்** — நடப்பதெல்லாம் நன்மைக்கே என நினைக்க வேண்டிய நாள், பணப்புழக்கம் அதிகமானாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள்.

**மகரம்** — குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள்.

**ரிஷபம்** — காலைப் பொழுதில் கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**சிம்மம்** — புண்ணிய காரியங்களுக்கு சிறிது செலவு செய்து மகிழும் வாய்ப்புண்டு, பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** — குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வங்கிச் சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.

**கும்பம்** — தேவையற்ற எதிர்பார்ப்புக்களை சந்திக்க நேரிடலாம், குடும்ப பொறுப்புக்கள் அதிகரிக்கும், நல்லவர் என நினைத்த ஒருவரே உங்களுக்கு விரோதமாக செயற்படலாம்.

**மிதுனம்** — தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி** — பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகலாம், முன்னேற்றத்திற்கு உதவிய சிலரைச் சந்திக்கும் வாய்ப்புண்டு, உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கற்பனை மிகுதியான நாள்.

**தனுசு** — புதிய முயற்சிகள் கைகூடும், குடும்ப ஒற்றுமை கூடும், பொது வாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும் வாய்ப்புண்டு, கொள்கைப் பிடிப்புடன் செயற்படுவீர்கள்.

**மீனம்** — வழிபாடு விருப்பங்களை நிறைவேற்றும், உறவினர் வழியில் மன நிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

தீய எண்ணங்களை உனக்கு சொந்தமாக்கி கொள்ளாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் தந்த ஆணையின் வழியில் பயணம் தொடரும்

## சிவாஜிலிங்கம்



(யாழ்ப்பாணம்)

இந்த வெற்றி எங்களை நாங்களே ஆள்வதற்காக மக்கள் எமக்கு தந்த ஆணையாக பார்க்கின்றேன் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய பேரவையின் வல்வெட்டித்துறை நகர சபை முதன்மை வேட்பாளருமான எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறை நகர சபையின் 9 வட்டாரங்களில் 7 வட்டாரங்களில் சைக்கிள் சின்னத்தில் போட்டியிட்ட தமிழ்த் தேசிய பேரவை வெற்றி பெற்றது. இது தொடர்பில் நேற்று முன்தினம் வினாவிய போதே மேற்கொண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், ஜே.வி.பியினுடைய பசப்பு வார்த்தைகளை நம்பி ஜனாதிபதித் தேர்தலிலும் பாராளுமன்றத் தேர்தலிலும் அவர்களுக்கு வாக்களித்தமை தவறு என்பதை உணர்ந்து இந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் மக்கள் தெளிவான செய்தியை சொல்லியிருக்கிறார்கள். இந்த தேர்தலில் பெருவாரியான வாக்குகளை தமிழ்க் கட்சிகளுக்கு வழங்கியிருக்கிறார்கள்.

மக்களின் வாக்களிப்பு சதவீதம் குறைவாகக் காணப்படுவதால் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் விகிதாசார பிரதிநிதித்துவம் ஊடாக வருகிறார்கள். மக்கள் உறங்கியிருக்காமல் விழிப்பாக இருந்து இனப்பிரச்சினைக்கான தீர்வுக்காக அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து போராடுவதற்கு அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும்.

இந்த வெற்றி எங்களை நாங்களே ஆள்வதற்காக மக்கள் எமக்குத் தந்த ஆணையாகப் பார்க்கின்றேன். எங்களினுடைய பயணம் தொடரும்.

வெறுமனே சபைகளில் ஆட்சியமைப்பதற்காக மாத்திரமல்லாது இனப் பிரச்சினை தீர்வு விடயத்தில் பொது உடன்பாட்டுக்கு வரும் வகையில் ஏனைய தமிழ்க் கட்சிகள் அனைத்தோடும் இணைந்து செயற்படுவோம் என மேலும் தெரிவித்தார். (6-8-33)

# 3 ஆயிரம் நாட்களை எட்டிய காணாமல் போன உறவுகளின் போர்



(குருமன்காடு)

தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் நேற்றுடன் 3000 நாளை எட்டியுள்ள நிலையில் கவனயீர்ப்பு ஆர்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இறுதிப் போரின் போதும், அதற்கு முன்னரும் காணாமல் போன தமது உறவுகளின் உண்மை நிலையினை வலியுறுத்தி தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் வவுனியா அஞ்சல் அலுவலகத்திற்கு அருகில் சுழற்சி முறை உணவுத் தவிர்ப்பு போராட்டம் கடந்த 8 வருடங்களுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிலையில் போராட்டம் ஆரம்பித்து மூவாயிரம் நாட்களை கடக்கின்ற நிலையில் அவர்களது போராட்டம் தீர்வின்றி தொடர்ந்து செல்கின்றது.

இதனையடுத்து, அவர்களால் கவனயீர்ப்பு ஆர்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அவர்கள் ஐரோப்பிய அமெரிக்க கொடிகளை ஏந்தியிருந்ததுடன், தங்களுக்கு சர்வதேச நீதி வேண்டும் என்பதை வலியுறுத்தியிருந்தனர். (6-8-250)




**மதுஷா**




**அபிராமி**




**விஷ்வா**





**வினுஷா**




**அனோஜி**




**டிலக்சன்**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

noolaham.org | aavanaham.org

# சஜித்தின் முகநூல் பதிவில் சதுரங்கம் விளையாடும் படம்



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தனது முகநூலில் சதுரங்கம் விளையாடும் படத்தை பதிவிட்டுள்ளார்.

இதன் மூலம் உள்ளூராட்சிசபைகளில் ஆட்சியமைப்பதற்கு எதிர்காலத்தில் பேச்சுவார்த்தைகள் அல்லது உடன்பாடுகள் அவசியம் என்பதை அவர் கோடிட்டுக்காட்டியுள்ளார்.

பல உள்ளூராட்சிசபைகளில் ஆட்சியமைப்பதற்கு ஏனைய கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயார் என்பதை இது வெளிப்படுத்தியுள்ளது. (நி-8)

# இலங்கையர்களுக்கு விசா வழங்குவதில் கட்டுப்பாடுகளை விதிக்கவுள்ள பிரித்தானியா

(லண்டன்)

இலங்கையர்கள், பாகிஸ்தானியர்கள் மற்றும் நைஜீரியர்கள் உள்ளிட்டவர்களின் வேலை மற்றும் கல்வி ஆகியவற்றுக்கான விசா விண்ணப்பங்களை கட்டுப்படுத்த பிரித்தானிய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வேறு நாடுகளில் இருந்து வருவோர் பிரித்தானியாவில் அதிக நாட்கள் தங்கிருந்து புகலிடம் கோர வாய்ப்புள்ளதால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விசாக்களை முறைகேடாக பயன்படுத்துவதை தடுப்பதற்கான புதிய அரசாங்கத்தின் திட்டத்தின் கீழ் பிரித்தானியாவில் அதிகளவில் புகலிடக் கோரிக்கைகள் உள்ள நாடுகளைச் சேர்ந்த ஒருவர் சுயவிபரப்படிவத்தில் தஞ்சம் கோரி விண்ணப்பிக்கும் விசா விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

# முல்லைத்தீவையும் கைப்பற்றியது இலங்கை தமிழ் அரசுக்கட்சி

(முல்லைத்தீவு)

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் முல்லைத் தீவில் நான்கு பிரதேச சபைகளையும் இலங்கை தமிழரசுக் கட்சி கைப்பற்றியுள்ளது.

மாந்தை கிழக்கு பிரதேச சபை, துணுக்காய் பிரதேச சபை, புதுக் குடியிருப்பு பிரதேச சபை மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபை ஆகிய 4 பிரதேச சபைகளையும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி கைப்பற்றியுள்ளது. (நி-8)


## பொதுச்சபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் வர்த்தக தொழிற்றுறை மன்றத்தின் 18 ஆவது பொதுச்சபை கூட்டம் கடந்த 3 ஆம் திகதி சனிக்கழமை கம்பனிச் செயலாளர் தலைமை யில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் கடந்த ஆண்டுக்கான செயற்றிட்ட அறிக்கைகள் மற்றும் நிதி அறிக்கைகள் அங்கத்தவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் 2025-2026 ஆம் ஆண்டுக்கான இயக்குநர் சபைத் தெரிவும் இடம்பெற்றது. புதிய தலை வராக கு. வசீகரன், உப தலை வராக கலாநிதி செ. திருமாறன் ஆகியோர் தெரிவு செய் யப்பட்டுள்ளனர். (3-8)

# முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல கைது



(கொழும்பு)

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று அவர் வாக்குமூலம் அளிப்பதற்காக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிற்கு சமூகமளித்திருந்த போதே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (நி-8)

# தேசிய மக்கள் சக்தி மீதான நம்பிக்கையை மக்கள் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளனர்

## மகிழ்ச்சியில் ரில்வின் சில்வா

(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு ஊழல் இல்லாத தேசிய சீர்திருத்த திட்டத்தைத் தொடர ஒரு ஆணை வழங்கப்பட்டுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

"தனி ஒரு கட்சியாக தேசிய மக்கள் சக்தி தெளிவான மற்றும் முன்னணி வெற்றியைப் பெற்றுள்ளது. இது சிறப்பு வாய்ந்தது," என்றும் அவர் தெரிவித்தார்.

அதிகாரங்களை நிறுவுவதற்கு சுயாதீன குழுக் களுடன் இணைந்து செயற்பட தயாராக உள்ளது.

ஆனால் வாக்காளர்களால் நிராகரிக்கப்பட்ட பிற அரசியல் கட்சிகளுடன் கூட்டணி அமைக்காது என்றும் அவர் தெரிவித்தார்.

"முன்னணி கட்சியாக, எங்களுக்கு ஆட்சி செய்ய உரிமை உண்டு," என்றும் அவர் மேலும் கூறினார்.

2025 உள்ளூராட்சித் தேர்தலில் கட்சி பெற்ற வெற்றிகளைக் குறிப்பிட்டு, பொதுமக்கள் தேசிய மக்கள் சக்தி மீதான நம்பிக்கையை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளனர். 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில், இலங்கை பொதுஜன பெரமுன வாக்குகளில் ஆதிக்கம் செலுத்தியதை விட, 2025 ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி அதிக வாக்குகளைப் பெற்றது என்றும் அவர் தெரிவித்தார் (நி-8)

# இதுவெறும் ஆரம்பம்தான் மீண்டும் களமிறங்குவோம்

## நாமல் அதிரடிப்பதிவு



(கொழும்பு)

இது வெறும் ஆரம்பம். உண்மையான தலைமையின் மீதான நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்பவும் மீட்டெடுக்கவும் நாங்கள் தொடர்ந்து பணியாற்றுவோம் என ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து அவர் எக்ஸ் தளத்தில் பதிவொன்றை இட்டு இதனை தெரிவித்தார்.

குறித்த பதிவில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஆறு மாதங்களில், ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன மீண்டும் ஒன்றிணைந்து, எங்கள் கொள்கைகளுக்கு உண்மையாக இருப்பதன் மூலம் உத்வேகம் பெற்றுள்ளது.

சிலர் பொய்யான வாக்குறுதிகளை நம்பியிருந்தாலும், மக்களை முதன்மைப்படுத்தும் நேர்மையான, கொள்கை ரீதியான அரசியலுக்கு நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

எங்களுடன் நின்ற அனைவருக்கும் நன்றி. இது வெறும் ஆரம்பம். உண்மையான தலைமையின் மீதான நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்பவும் மீட்டெடுக்கவும் நாங்கள் தொடர்ந்து பணியாற்றுவோம் எனப் பதிவிட்டுள்ளார். (நி-8)

# அனைத்து எதிர்க்கட்சிகளுக்கு சஜித் அழைப்பு

(கொழும்பு)

வலுவான, நேர்மையான பொதுச் சேவையை வழங்க அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரு கூட்டுப் பணியில் ஈடுபட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அழைப்பு விடுத்தார்.

உண்மையுள்ள நிர்வாகத்திற்கான பொதுமக்களின் கோரிக்கைக்கு பதிலளிக்கும் விதமாக இந்த முயற்சியை வழிநடத்த ஐக்கிய மக்கள் சக்தி தயாராக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து சிறப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்ட சஜித் பிரேமதாச, அவமானங்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் அரசியல் சதித்திட்டங்கள் இருந்தபோதிலும் ஐக்கிய மக்கள் சக்தியை ஆதரித்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார். (நி-8)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுனர் கைத் தொழிற் பயிற்சி அதிகார சபையினால் தகவல் தொடர் பாடல் மற்றும் தொழில்நுட்பவியல் (NVQ 04) கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அந்தவகையில் இக்கற்கை நெறிக்கான கல்வித் தகைமையாக க.பொ.த (சா/த) பரீட்சையில் ஏதேனும் 03 பாடங்களில் திறமைச் சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலான 06 பாடங்களில் சித்தியுடன் க.பொ.த (உ/த) பரீட்சையில் 02 பாடங்களில் சித்தியும் இருக்க வேண்டும்.

இக்கற்கை நெறிக்கு விண்ணப்பித்தவர்கள் 16-25 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டுமென்பதுடன் 05.06. 2025 விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னதாக தமது முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம் கல்வித்தகைமைகள் மற்றும் தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை மாவட்ட முகாமையாளர், தேசிய பயிலுனர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, மாவட்ட அலுவலகம், இல.44 சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு மேலதிக விபரங்களுக்கு 021222 2383 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியுமென தேசிய பயிலுனர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் இ.திருமுருகன் தெரிவித்துள்ளார். (8-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி தேர்த

## யாழ்.மாநகர சபை

| | | ஆசனம்+போனஸ் |
|---|---|---|
| தமிழ்த் தேசியப் பேரவை | 9, 124 | 11 + 1 |
| தமிழரசுக் கட்சி | 10, 370 | 10 + 3 |
| ஈ.பி.டி.பி | 3, 567 | 0 + 4 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 587 | 0 + 1 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 3, 076 | 2 + 2 |
| தேசிய மக்கள் சக்தி | 7, 702 | 4 + 6 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 103 | 0 + 0 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 464 | 0 + 1 |

## சாவகச்சேரி நகர சபை

| | | ஆசனம்+போனஸ் |
|---|---|---|
| தமிழ்த் தேசியப் பேரவை | 2, 959 | 4 + 2 |
| தமிழரசுக் கட்சி | 2, 594 | 3 + 3 |
| ஈ.பி.டி.பி | 535 | 0 + 1 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 20 | 0 + 0 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 738 | 2 + 0 |
| தேசிய மக்கள் சக்தி | 1, 445 | 2 + 1 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 45 | 0 + 0 |
| சுயேட்சைக் குழு | 203 | 0 + 0 |

## காரைநகர் பிரதேச சபை

| | | ஆசனம்+போனஸ் |
|---|---|---|
| தமிழ்த் தேசியப் பேரவை | 833 | 2 + 0 |
| தமிழரசுக் கட்சி | 442 | 0 + 1 |
| ஈ.பி.டி.பி | 166 | 0 + 0 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 604 | 2 + 0 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 16 | 0 + 0 |
| தேசிய மக்கள் சக்தி | 1,044 | 0 + 2 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 909 | 0 + 2 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 35 | 0 + 0 |
| சோசலிச சமத்துவக் கட்சி | 22 | 0 + 0 |
| சுயேட்சைக் குழு | 1,350 | 2 + 0 |

## வேலணை பிரதேச சபை

| | | ஆசனம்+போனஸ் |
|---|---|---|
| தமிழ்த் தேசியப் பேரவை | 976 | 0 + 2 |
| தமிழரசுக் கட்சி | 2, 673 | 8 + 0 |
| ஈ.பி.டி.பி | 1, 313 | 0 + 3 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 314 | 0 + 1 |
| தேசிய மக்கள் சக்தி | 1, 840 | 4 + 0 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 450 | 0 + 1 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 27 | 0 + 0 |
| சுயேட்சைக் குழு 1 | 492 | 0 + 1 |
| சுயேட்சைக் குழு 2 | 318 | 0 + 1 |
| சுயேட்சைக் குழு 3 | 198 | 0 + 1 |

## வல்வெட்டித்துறை நகர சபை

| | | ஆசனம்+போனஸ் |
|---|---|---|
| தமிழ்த் தேசியப் பேரவை | 1, 558 | 7 + 0 |
| தமிழரசுக் கட்சி | 1, 299 | 2 + 3 |
| ஈ.பி.டி.பி | 90 | 0 + 1 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 14 | 0 + 0 |
| தேசிய மக்கள் சக்தி | 676 | 0 + 3 |
| மக்கள் கூட்டணி | 76 | 0 + 0 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 10 | 0 + 0 |

## பருத்தித்துறை நகர சபை

| | | ஆசனம்+போனஸ் |
|---|---|---|
| தமிழ்த் தேசியப் பேரவை | 2, 045 | 5 + 0 |
| தமிழரசுக் கட்சி | 1, 518 | 3 + 1 |
| ஈ.பி.டி.பி | 213 | 0 + 1 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 9 | 0 + 0 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 665 | 1 + 1 |
| தேசிய மக்கள் சக்தி | 736 | 0 + 2 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 19 | 0 + 0 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 10 | 0 + 0 |
| சுயேட்சைக் குழு | 355 | 0 + 1 |

# யாழ் மாவட்டம்

## ஊர்காவற்றுறை பிரதேச சபை

| | | ஆசனம்+போனஸ் |
|---|---|---|
| தமிழ்த் தேசியப் பேரவை | 1, 371 | 2 + 1 |
| தமிழரசுக் கட்சி | 984 | 0 + 2 |
| ஈ.பி.டி.பி | 1, 428 | 4 + 0 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 47 | 0 + 0 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 385 | 0 + 1 |
| தேசிய மக்கள் சக்தி | 1, 115 | 2 + 1 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 32 | 0 + 0 |

## சாவகச்சேரி பிரதேச சபை

| | | ஆசனம்+போனஸ் |
|---|---|---|
| தமிழ்த் தேசியப் பேரவை | 5, 916 | 2 + 5 |
| தமிழரசுக் கட்சி | 6, 938 | 6 + 2 |
| ஈ.பி.டி.பி | 650 | 0 + 1 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 58 | 0 + 0 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 4, 310 | 5 + 0 |
| தேசிய மக்கள் சக்தி | 5, 234 | 4 + 2 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 1, 414 | 0 + 1 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 130 | 0 + 0 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தல் முடிவுகள்-2025

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை

| | | ஆசனம்+போனஸ் |
|---|---|---|
| தமிழ்த் தேசியப் பேரவை | 4,982 | 3 + 3 |
| தமிழரசுக் கட்சி | 7,364 | 10 + 0 |
| ஈ.பி.டி.பி | 1,386 | 0 + 2 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 809 | 1 + 0 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 2,026 | 1 + 1 |
| தேசிய மக்கள் சக்தி | 3,407 | 0 + 4 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 499 | 0 + 0 |
| சுயேட்சைக் குழு | 702 | 0 + 1 |

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை

| | | ஆசனம்+போனஸ் |
|---|---|---|
| தமிழ்த் தேசியப் பேரவை | 3,619 | 2 + 4 |
| தமிழரசுக் கட்சி | 7,233 | 11 + 0 |
| ஈ.பி.டி.பி | 1,655 | 0 + 3 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 175 | 0 + 0 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 2,261 | 1 + 2 |
| தேசிய மக்கள் சக்தி | 5,675 | 7 + 2 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 694 | 0 + 1 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1,106 | 0 + 2 |

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை

| | | ஆசனம்+போனஸ் |
|---|---|---|
| தமிழ்த் தேசியப் பேரவை | 3,732 | 1 + 3 |
| தமிழரசுக் கட்சி | 6,896 | 8 + 0 |
| ஈ.பி.டி.பி | 1,675 | 1 + 1 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 141 | 0 + 0 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 4,159 | 4 + 1 |
| தேசிய மக்கள் சக்தி | 5,424 | 2 + 4 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 1,843 | 1 + 1 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 917 | 0 + 1 |

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை

| | | ஆசனம்+போனஸ் |
|---|---|---|
| தமிழ்த் தேசியப் பேரவை | 5,047 | 2 + 3 |
| தமிழரசுக் கட்சி | 9,881 | 6 + 5 |
| ஈ.பி.டி.பி | 946 | 1 + 0 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 136 | 0 + 0 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 4,543 | 4 + 1 |
| தேசிய மக்கள் சக்தி | 7,908 | 9 + 0 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 1,662 | 0 + 2 |
| சுயேட்சைக் குழு 1 | 1,910 | 0 + 2 |
| சுயேட்சைக் குழு 2 | 931 | 0 + 1 |

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை

| | | ஆசனம்+போனஸ் |
|---|---|---|
| தமிழ்த் தேசியப் பேரவை | 4,471 | 3 + 3 |
| தமிழரசுக் கட்சி | 9,216 | 13 + 0 |
| ஈ.பி.டி.பி | 560 | 0 + 1 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 5,171 | 2 + 4 |
| தேசிய மக்கள் சக்தி | 3,956 | 0 + 5 |

## வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை

| | | ஆசனம்+போனஸ் |
|---|---|---|
| தமிழ்த் தேசியப் பேரவை | 4,255 | 5 + 2 |
| தமிழரசுக் கட்சி | 6,995 | 13 + 0 |
| ஈ.பி.டி.பி | 1,165 | 0 + 2 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 145 | 0 + 0 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 2,512 | 1 + 3 |
| தேசிய மக்கள் சக்தி | 3,329 | 0 + 6 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 170 | 0 + 0 |

## நெடுந்தீவு பிரதேச சபை

| | | ஆசனம்+போனஸ் |
|---|---|---|
| தமிழ்த் தேசியப் பேரவை | 158 | 0 + 1 |
| தமிழரசுக் கட்சி | 974 | 4 + 2 |
| ஈ.பி.டி.பி | 752 | 3 + 1 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 7 | 0 + 0 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 6 | 0 + 0 |
| தேசிய மக்கள் சக்தி | 412 | 1 + 1 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 13 | 0 + 0 |

## பருத்தித்துறை பிரதேச சபை

| | | ஆசனம்+போனஸ் |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 7,490 | 9 + 0 |
| ஈ.பி.டி.பி | 924 | 0 + 1 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 229 | 0 + 0 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 3,684 | 1 + 3 |
| தேசிய மக்கள் சக்தி | 3,892 | 1 + 3 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 257 | 0 + 0 |
| சுயேட்சைக் குழு | 1,363 | 1 + 1 |

## நல்லூர் பிரதேச சபை

| | | ஆசனம்+போனஸ் |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 5,576 | 6 + 1 |
| ஈ.பி.டி.பி | 986 | 0 + 1 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 102 | 0 + 0 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 2,095 | 1 + 2 |
| தேசிய மக்கள் சக்தி | 2,820 | 1 + 2 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 4,921 | 4 + 2 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 388 | 0 + 0 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள்-2025

## கிளிநொச்சி மாவட்டம்

### பச்சிலைப்பள்ளி பிரதேச சபை

| | | |
|---|---|---|
| தமிழ்த் தேசியப் பேரவை | 508 | 0 + 1 |
| தமிழரசுக் கட்சி | 3, 040 | 6 + 0 |
| ஈ.பி.டி.பி | 123 | 0 + 0 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 16 | 0 + 0 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 1, 511 | 1 + 2 |
| தேசிய மக்கள் சக்தி | 1, 349 | 1 + 2 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 208 | 0 + 0 |
| சுயேட்சைக் குழு | 100 | 0 + 0 |

### பூநகரி பிரதேச சபை

| | | |
|---|---|---|
| தமிழ்த் தேசியப் பேரவை | 325 | 0 + 1 |
| தமிழரசுக் கட்சி | 5, 171 | 10 + 0 |
| ஈ.பி.டி.பி | 971 | 1 + 0 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 88 | 0 + 0 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 2, 355 | 0 + 3 |
| தேசிய மக்கள் சக்தி | 1, 884 | 0 + 3 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 280 | 0 + 0 |
| சுயேட்சைக் குழு 1 | 632 | 0 + 1 |
| சுயேட்சைக் குழு 2 | 486 | 0 + 1 |

### கரைச்சி பிரதேச சபை

| | | |
|---|---|---|
| தமிழ்த் தேசியப் பேரவை | 2, 712 | 0 + 2 |
| தமிழரசுக் கட்சி | 20, 962 | 20 + 0 |
| ஈ.பி.டி.பி | 493 | 0 + 1 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 232 | 0 + 0 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 5, 058 | 0 + 4 |
| தேசிய மக்கள் சக்தி | 7, 319 | 0 + 6 |
| மக்கள் கூட்டணி | 103 | 0 + 0 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 2, 195 | 1 + 1 |
| சுயேட்சைக் குழு | 1, 664 | 0 + 2 |




## முல்லைத்தீவு மாவட்டம்

### மாந்தை கிழக்கு பிரதேச சபை

| | | |
|---|---|---|
| தமிழ்த் தேசியப் பேரவை | 808 | 1 + 1 |
| தமிழரசுக் கட்சி | 1, 364 | 4 + 0 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 500 | 0 + 2 |
| தேசிய மக்கள் சக்தி | 607 | 1 + 1 |
| ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி | 136 | 0 + 0 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 990 | 2 + 1 |
| சுயேட்சைக் குழு 1 | 81 | 0 + 0 |
| சுயேட்சைக் குழு 2 | 134 | 0 + 0 |

### துணுக்காய் பிரதேச சபை

| | | |
|---|---|---|
| தமிழ்த் தேசியப் பேரவை | 1, 082 | 1 + 2 |
| தமிழரசுக் கட்சி | 1, 594 | 4 + 0 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 804 | 2 + 0 |
| தேசிய மக்கள் சக்தி | 492 | 0 + 1 |
| ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி | 254 | 0 + 1 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 605 | 1 + 0 |
| சுயேட்சைக் குழு 1 | 388 | 0 + 1 |
| சுயேட்சைக் குழு 2 | 219 | 0 + 0 |

### கரைதுறைப்பற்று பிரதேச சபை

| | | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 6, 306 | 6 + 1 |
| தேசிய மக்கள் சக்தி | 4, 407 | 2 + 3 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 3, 672 | 3 + 1 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1, 962 | 1 + 1 |
| சுயேட்சைக் குழு | 1, 392 | 1 + 0 |
| ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி | 624 | 0 + 1 |
| ஐக்கிய தேசியக் கூட்டணி | 548 | 0 + 1 |
| தமிழ்த் தேசியப் பேரவை | 317 | 0 + 0 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 329 | 0 + 0 |

### புதுக்குடியிருப்பு பிரதேச சபை

| | | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 10, 816 | 11 + 0 |
| தேசிய மக்கள் சக்தி | 4, 028 | 0 + 4 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 2, 652 | 1 + 1 |
| சுயேட்சைக் குழு | 2, 491 | 0 + 2 |
| தமிழ்த் தேசியப் பேரவை | 1, 174 | 0 + 1 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1, 026 | 0 + 1 |
| ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி | 658 | 0 + 1 |
| மக்கள் கூட்டணி | 160 | 0 + 0 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள்-2025

## மன்னார் மாவட்டம்

### மன்னார் நகர சபை

| | | |
|---|---|---|
| தமிழ்த் தேசியப் பேரவை | 371 | 0 + 0 |
| தமிழரசுக் கட்சி | 2, 255 | 4 + 0 |
| ஐக்கிய தேசியக் கூட்டணி | 535 | 0 + 1 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 1, 807 | 1 + 1 |
| தேசிய மக்கள் சக்தி | 2, 123 | 1 + 2 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 1, 439 | 1 + 1 |
| ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி | 584 | 0 + 1 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1, 943 | 2 + 1 |

### மன்னார் பிரதேச சபை

| | | |
|---|---|---|
| தமிழ்த் தேசியப் பேரவை | 646 | 0 + 1 |
| தமிழரசுக் கட்சி | 2, 577 | 5 + 0 |
| ஈ.பி.டி.பி | 156 | 0 + 0 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 3,400 | 3 + 1 |
| தேசிய மக்கள் சக்தி | 2, 944 | 0 + 3 |
| ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி | 1, 450 | 0 + 2 |
| ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் | 2, 124 | 1 + 1 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 3,520 | 3 + 1 |
| சர்வஜன அதிகாரம் | 93 | 0 + 0 |
| சுயேட்சைக் குழு | 568 | 0 + 1 |

### நானாட்டான் பிரதேச சபை

| | | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 3, 006 | 2 + 2 |
| ஈ.பி.டி.பி | 103 | 0 + 0 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 1, 314 | 0 + 2 |
| தேசிய மக்கள் சக்தி | 4, 518 | 6 + 0 |
| மக்கள் கூட்டணி | 104 | 0 + 0 |
| ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி | 747 | 0 + 1 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1, 856 | 1 + 1 |
| சுயேட்சைக் குழு | 1, 380 | 1 + 1 |

### முசலி பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 551 | 0 + 1 |
| தேசிய மக்கள் சக்தி | 2, 132 | 2 + 1 |
| மக்கள் கூட்டணி | 96 | 0 + 0 |
| ஜனநாயக தேசிய கூட்டணி | 76 | 0 + 0 |
| ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி | 2, 441 | 3 + 1 |
| ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் | 1, 482 | 1 + 1 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 3, 767 | 3 + 2 |
| சர்வஜன அதிகாரம் | 171 | 0 + 0 |
| சுயேட்சைக் குழு | 611 | 1 + 0 |

### மாந்தை மேற்கு பிரதேச சபை

| | | |
|---|---|---|
| தமிழ்த் தேசியப் பேரவை | 700 | 0 + 1 |
| தமிழரசுக் கட்சி | 3, 218 | 5 + 0 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 2, 792 | 3 + 1 |
| தேசிய மக்கள் சக்தி | 2, 416 | 2 + 2 |
| மக்கள் கூட்டணி | 334 | 0 + 0 |
| ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி | 1, 330 | 0 + 2 |
| ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் | 492 | 0 + 1 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 2, 842 | 3 + 1 |

## வவுனியா மாவட்டம்

### வவுனியா மாநகர சபை

| | | |
|---|---|---|
| தமிழ்த் தேசியப் பேரவை | 647 | 0 + 1 |
| தமிழரசுக் கட்சி | 2, 185 | 0 + 3 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 204 | 0 + 0 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 2, 350 | 3 + 1 |
| தேசிய மக்கள் சக்தி | 2, 344 | 4 + 0 |
| ஜனநாயக தேசிய கூட்டணி | 630 | 0 + 1 |
| ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி | 2, 293 | 4 + 0 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1, 088 | 0 + 2 |
| சர்வஜன அதிகாரம் | 113 | 0 + 0 |
| சுயேட்சைக் குழு 1 | 332 | 0 + 1 |
| சுயேட்சைக் குழு 2 | 326 | 1 + 0 |

### வவுனியா வடக்கு பிரதேச சபை

| | | |
|---|---|---|
| தமிழ்த் தேசியப் பேரவை | 1, 696 | 2 + 2 |
| தமிழரசுக் கட்சி | 2, 210 | 4 + 1 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 1, 255 | 2 + 1 |
| தேசிய மக்கள் சக்தி | 2, 650 | 6 + 0 |
| ஜனநாயக தேசிய கூட்டணி | 198 | 0 + 0 |
| ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி | 967 | 0 + 2 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 956 | 0 + 2 |
| சர்வஜன அதிகாரம் | 317 | 0 + 1 |
| சுயேட்சைக் குழு 1 | 201 | 0 + 0 |

### வெண்கல செட்டிக்குளம் பிரதேச சபை

| | | |
|---|---|---|
| தமிழ்த் தேசியப் பேரவை | 186 | 0 + 0 |
| தமிழரசுக் கட்சி | 1, 957 | 3 + 0 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 240 | 0 + 0 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 1, 661 | 1 + 1 |
| தேசிய மக்கள் சக்தி | 2, 085 | 2 + 1 |
| ஜனநாயக தேசிய கூட்டணி | 1, 225 | 1 + 1 |
| ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி | 1, 573 | 0 + 2 |
| ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் | 626 | 0 + 1 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 2, 838 | 4 + 0 |
| சர்வஜன அதிகாரம் | 339 | 0 + 0 |
| சுயேட்சைக் குழு 1 | 328 | 0 + 0 |
| சுயேட்சைக் குழு 2 | 340 | 0 + 1 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்





சிரித்த மறுகணமே, அவனுடைய உடம்பின் ரத்தம் உறைந்து இதயத்துடிப்பு நின்று, கண்விழிகள் பிதுங்கும்படியான பயங்கரத் தோற்றத்தை அவன் கண்டான்.

படிக்கட்டில் ஏறினான் அல்லவா? மேல் படியில் கால் வைத்ததும், இனி ஏறுவதற்குப் படியில்லையென்று உணர்ந்து நாம் எங்கே வந்திருக்கிறோம் என்பதை அறிந்து கொள்ளச் சுற்றுமுற்றும் பார்த்தான். நூறு நூறு கொள்ளிக்கண்கள் அவனை உற்றுப் பார்த்தன. அந்தக் கண்கள் எல்லாம் பயங்கரமான காட்டு மிருகங்களின் கண்கள்! முதலில் ஏற்பட்ட பீதியில், வந்த வழியே திரும்பிவிட யத்தனித்தான். ஆனால் பின்னால் வழியைக் காணோம். மேற்படியில் அவன் கால் வைத்ததும் பின்னால் ஏதோ சத்தம் கேட்டது.

சுரங்க வழி தானாக மூடிக் கொண்டு விட்டது போலும்! ஆனால் இது என்ன கோர பயங்கரம்? இவ்வளவு காட்டு மிருகங்களும் தனக்காக இங்கே காத்திருக்கின்றனவே! வேங்கைப் புலிகள், சிறுத்தைகள், சிங்கங்கள், கரடிகள், காட்டு எருமைகள், ஓநாய்கள், நரிகள், காண்டா மிருகங்கள்! அதோ இரண்டு யானைகள்! எல்லாம் தன் மீது பாய்வதற்கல்லவா ஆயத்தமாக இருக்கின்றன? ஏன் இன்னும் பாயவில்லை? அதோ, அவ்வளவு பிரம்மாண்டமான பருந்து! ஐயோ! அந்த ராட்சத ஆந்தை! ஆள் விழுங்கி வௌவால்! தான் காண்பது கனவா? அல்லது. இது என்ன? இங்கே ஒரு முதலை கிடக்கிறதே? வாயைப் பிளந்து கொண்டு கோரமான பற்களைக் காட்டிக் கொண்டு கிடக்கிறதே? முதலை தண்ணீரில் அல்லவா இருக்கும்? இது வெறுந்தரையல்லவா? காட்டு மிருகங்களுக்கு மத்தியில் இந்த முதலை எப்படி வந்தது?

"அம்மா! பிழைத்தேன்!" என்று வாய்விட்டுக் கூறினான் வந்தியத்தேவன். தன்னைச் சூழ்ந்திருந்த அந்த மிருகங்கள் எல்லாம் உயிர் உள்ள மிருகங்கள் அல்லவென்பதை உணர்ந்தான். சம்புவரையர் குலத்தார் வேட்டைப் பிரியர்கள் என்று கந்தமாறன் கூறியிருந்தது நினைவு வந்தது. அந்த வம்சத்தினர் வேட்டையாடிக் கொன்ற மிருகங்களில் சிலவற்றின் தோலைப் பதனப்படுத்தி, உள்ளே பஞ்சும் வைக்கோலும் அடைத்து உயிர் விலங்குகளைப் போல் வைத்திருக்கும் வேட்டை மண்டபம் ஒன்று அந்த மாளிகையில் உண்டு என்று கந்தமாறன் கூறியதும் நினைவு வந்தது.

அந்த வேட்டை மண்டபத்துள் இப்போது தான் வந்திருப்பதை வந்தியத்தேவன் அறிந்து கொண்டான். ஆயினும் முதலில் ஏற்பட்ட பீதியினால் உண்டான உடம்பு நடுக்கம் நிற்பதற்கு சிறிது நேரம் ஆயிற்று.

பின்னர் ஒவ்வொரு மிருகமாக அருகில் சென்று பார்த்தான். தொட்டுப் பார்த்தான், அசைத்துப் பார்த்தான், மிதித்தும் பார்த்தான். அந்த மிருகங்களுக்கு உயிர் இல்லை என்பதை நிச்சயமாகத் தெரிந்து கொண்டான்.

(தொடரும்)

## வவுனியா தெற்கு (தமிழ்) பிரதேச சபை

| | | |
|---|---|---|
| தமிழ்த் தேசியப் பேரவை | 1,901 | 1 + 0 |
| தமிழரசுக் கட்சி | 7,033 | 3 + 2 |
| ஈ.பி.டி.பி | 1,173 | 0 + 1 |
| மக்கள் போராட்ட கூட்டணி | 183 | 0 + 0 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 3,949 | 2 + 1 |
| தேசிய மக்கள் சக்தி | 7,260 | 5 + 1 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 1,482 | 0 + 1 |
| ஜனநாயக தேசியக் கூட்டணி | 2,075 | 1 + 1 |
| ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி | 3,436 | 1 + 1 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 3,870 | 2 + 1 |
| சர்வஜன அதிகாரம் | 1,123 | 0 + 1 |
| சுயேட்சைக் குழு 1 | 456 | 0 + 0 |
| சுயேட்சைக் குழு 2 | 1,285 | 0 + 1 |
| சுயேட்சைக் குழு 3 | 768 | 0 + 1 |

## வவுனியா தெற்கு (சிங்கள) பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி | 338 | 0 + 1 |
| மக்கள் போராட்ட கூட்டணி | 42 | 0 + 0 |
| தேசிய மக்கள் சக்தி | 3,645 | 7 + 0 |
| ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி | 662 | 0 + 1 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 436 | 0 + 1 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1,844 | 1 + 3 |
| சர்வஜன அதிகாரம் | 758 | 0 + 1 |
| சுயேட்சைக் குழு 1 | 180 | 0 + 0 |
| சுயேட்சைக் குழு 2 | 606 | 2 + 0 |

## மட்டக்களப்பு மாவட்டம்

| | | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 91,818 | 85 |
| தேசிய மக்கள் சக்தி | 53,002 | 44 |
| தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் | 39,791 | 37 |
| ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் | 32,214 | 31 |

## திருகோணமலை மாவட்டம்

| | | |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 52,569 | 68 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 34,328 | 36 |
| தமிழரசுக் கட்சி | 31,394 | 36 |
| ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் | 27,663 | 22 |

# உள்ளூராட்சி சபைத்தேர்தல் 2025

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறரின் முயற்சிகளுக்கு இடையூறு அளிக்காமல் இருப்பதில் கவனமாய் இருப்பவரே இனிய தன்மை உடையவர் – அறிஞர்

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

## தமிழ் மக்களின் அரசியல் ஞானத்தை வெளிப்படுத்திய தேர்தல் முடிவுகள்

உள்ளூர் ஆட்சி சபைத் தேர்தல் நடந்தாயிற்று. ஏழு ஆண்டுகளாக நடைபெறாத உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தி முடித்த பெருமை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவையே சாரும்.

ஆம். ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றதும் அவர் உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்தி வைப்பதிலேயே தீவிரமாக இருந்தார். உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தினால், நாட்டின் பொருளாதாரம் பெருமந்தமாகிவிடும் என்பது அவரின் நிலைப்பாடாக இருந்தது.

எனினும் அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் முதலில் பொதுத் தேர்தலை நடத்தி முடித்தார். அதன் அடுத்த கட்டமாக உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தி முடிக்கப்பட்டது.

இனி மாகாண சபைத் தேர்தல் மட்டுமே எஞ்சி உள்ளது. மாகாண சபைத் தேர்தலும் விரைவில் நடத்தி முடிக்கப்படும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

இங்கு தான் தேர்தலை நடத்துவதில் ஏற்படக்கூடிய பணச் செலவு பற்றி ஜனாதிபதி அநுர இம்மியும் கருத்தில் கொள்ளவில்லை.

மாறாக, ஜனநாயக நாட்டில் தேர்தல் என்பது மிகவும் அவசியமானது. பாராளுமன்றத் தேர்தல் எங்ஙனம் முக்கியமோ அதுபோல உள்ளூராட்சி சபைத் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல் என்பனவும் முக்கியமானவை.

அவ்வாறு தேர்தல்களை நடத்தி முடித்தால் பதவிகளை எதிர்பார்த்து இருப்பவர்கள் திருப்தி அடைவார்கள். இதனால் தேவையற்ற குழப்பங்கள் இல்லாமல் போகும். அதே போன்று மாகாணசபைத் தேர்தல் என்பது தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வோடு சம்பந்தப்பட்டது.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதன் மூலம் தமிழ், முஸ்லிம் மக்களை ஓரளவுக்குத் திருப்திப்படுத்துவதுடன் இனப்பிரச்சனைக்கான தீர்வு பற்றி பிரஸ்தாபிக்கின்ற வெளிநாடுகளுக்கும் பதிலளிப்பது சுலபமாக இருக்கும் என்ற அடிப்படையில் தேர்தலை நடத்தி முடிப்பதில் அநுர அரசு தீவிரம் காட்டி வருகிறது. இது ஒரு முன்னுரையாக இருக்க,

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஆனது தமிழ் அரசியல் கட்சிகளுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை தமிழ் மக்கள் வழங்குவதாக அமைகிறது.

ஆம். கடந்த பொதுத் தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்கவின் தேசிய மக்கள் சக்திக்கு தமது ஆதரவை வழங்கி அதன் மூலம் தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்திய தமிழ் மக்கள், உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் கட்சிகளுக்கு தமது வாக்குகளை வழங்கி உள்ளனர்.

இங்குதான் நம் தமிழ் மக்கள் மிகவும் நிதானமாகச் செயலாற்றுகின்றனர். அவர்களிடம் இருக்கக்கூடிய அரசியல் அனுபவம் மிகவும் உன்னதமானது என்ற உண்மை உணர்த்தப்படுகிறது.

எனினும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகளை வைத்துக்கொண்டு நாங்கள் மீளவும் எழுந்து விட்டோம். எங்களின் அரசியல் பித்தலாட்டத்தை தமிழ் மக்கள் அங்கீகரித்து உள்ளனர் என்று தமிழ்த் தரப்புகள் நினைக்குமாயின் எதிர்வரும் தேர்தல்களில் இடி விழுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

ஆக, உள்ளூராட்சி சபைத் தேர்தல் மூலம் தமிழ் அரசியல் தரப்புகளுக்கு தமிழ் மக்கள் மீள் நியமனம் வழங்கி உள்ளனர். இந்த மீள் நியமனம் தகுதிகாண் காலத்தைக் கொண்டது.

இதற்குள் நீங்கள் உங்களுடைய ஒற்றுமை, நேர்மை, தமிழினம் சார்ந்த விசுவாசம் என்பவற்றை நிரூபித்தாக வேண்டும்.

### தேசிய மக்கள் சக்தி தமிழர் தாயகத்தில்

# படுதோல்வி அடைய பொய்த்துப் போன தேர்தல் வாக்குறுதிகளே காரணம்

## நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் இடித்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த தேர்தல்களில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப்படாமையே தேசிய மக்கள் சக்தி உள்ளூராட்சித் தேர்தலில் தமிழர் தாயகத்தில் படுதோல்வி அடையக் காரணம் என நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவுகளிற்குப் பின்னர் அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்பு வழங்கிய வாக்குறுதிகள் ஒன்றையும் நிறைவேற்றவில்லை. சிறையிலுள்ள அரசியல் கைதிகளை விடுவிப்பதாகக் கூறிய போதிலும் இதுவரையில் விடுவிக்கவில்லை.

காணிகள் கையகப்படுத்தப்படமாட்டாது என வாக்குறுதி அளிக்கப்பட்டது. எனினும் திணைக்களங்களால் மக்களின் காணிகள் தொடர்ந்து கையகப்படுத்தப்பட்டு வருகின்றது. இராணுவம் குறைக்கப்படும் என உறுதியழிக்கப்பட்டது.

ஆனால் முல்லைத்தீவில் 2 பொது மக்களுக்கு ஒரு இராணுவம் என்ற கணக்கில் உள்ளனர். அவ்வாறான நிலையில் தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைகளும் முன்பு இருந்த அரசாங்கத்தின் கொள்கைகளிலும் மாற்றம் இல்லை என்பது தெளிவாகியுள்ளது.

இதன் காரணமாகவே இம்முறை அரசாங்கத்திற்கு இந்த மக்களின் ஆதரவு பெரியளவில் கிடைக்கவில்லை.

வடக்குக் கிழக்கு மக்கள், சிங்கள மக்களுடன் நல்ல உறவில் தான் உள்ளனர். எனினும் எங்களுக்கு என்று உரிமை உள்ளது. தமிழர்கள் தமிழர்களின் இடத்தை நிர்வகிக்க எங்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்பதனையே நாங்கள் கோருகின்றோம்.

சிங்களப் பெரும்பான்மை கொண்ட அரசாங்கத்தினால் எங்களுக்கு எவ்வித உரிமையும் வழங்கப்படாமல் உள்ளது.

இதனாலேயே எங்கள் மக்கள் இதனைச் சுட்டிக்காட்டி தமிழ்க் கட்சிகளுக்கு வாக்களித்துள்ளனர் என அவர் குறித்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (ம-4,7)

# 339 சபைகளில் 265 சபைகளை தனதாக்கி வாகை சூடியது தே.ம.சக்தி

நடைபெற்று முடிந்த 339 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலின் முடிவுகளின் பிரகாரம் 265 சபைகளை தனதாக்கி ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்தி வெற்றி வாகை சூடியுள்ளது.

3,927 உறுப்பினர்கள் தேசிய மக்கள் சக்தியூடாக தெரிவாகியுள்ளனர்.

எனினும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியினால் 14 உள்ளூராட்சி மன்றங்களில் மாத்திரமே முன்னிலை பெற முடிந்துள்ளது.

இலங்கைத்தமிழரசுக் கட்சி 377 ஆசனங்களுடன் 35 உள்ளூராட்சி மன்றங்களில்முன்னிலை பெற்றுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 06 உள்ளூராட்சி மன்றங்களில் வெற்றி பெற்றுள்ளது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் 03 உள்ளூராட்சி மன்றங்களிலும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் தேசிய காங்கிரஸ் என்பன 02 உள்ளூராட்சி மன்றங்களிலும் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி ஆகியன தலா ஒரு உள்ளூராட்சி மன்றத்திலும் வெற்றி பெற்றுள்ளன. (ம-7)

# பயங்கரவாதிகளின் முகாம்களே இந்திய இராணுவத்தின் இலக்கு

## இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் விளக்கம்

(கொழும்பு)

பயங்கரவாதிகளின் முகாம்கள் மீது இந்திய ஆயுதப்படைகள் துல்லியமான தாக்குதல் நடத்தியுள்ளதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டு மேற்படி தகவலை வெளியிட்டிருக்கும் கொழும்பிலுள்ள இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நேற்று அதிகாலை இந்திய பாதுகாப்பு படையினர் 'ஒப்ரேஷன் சிந்தூர்' இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்து, இந்தியாவுக்கு எதிரான பயங்கரவாதத் தாக்குதல் திட்டமிடப்பட்டு நடத்தப்பட்ட பாகிஸ்தானிலும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு ஜம்மு - காஷ்மீர் பகுதியிலும் உள்ள பயங்கரவாதக் கட்டமைப்புகளைத் தாக்கின.

இந்தத் தாக்குதலில் மொத்தமாக ஒன்பது பயங்கரவாத முகாம்கள் குறிவைத்துத் தாக்கப்பட்டன.

இந்தியாவின் நடவடிக்கைகள் துல்லியமானவை, அத்துமீறல் இல்லாதவை. அத்துடன் குறித்த இலக்குகள் மீது மாத்திரமே தாக்குதல் நடத்தப்பட்டன. இந்தத் தாக்குதலில் எந்தவொரு பாகிஸ்தானிய இராணுவ நிலைகளும் குறிவைக்கப்படவில்லை. இலக்குகளைத் தேர்ந்தெடுப்பதிலும், தாக்குதலை செயற்படுத்தும் முறையிலும் இந்தியா நிதானத்தைக் கடைப்பிடித்துள்ளது.

25 இந்தியர்களும் ஒரு நேபாளத்தைச் சேர்ந்தவரும் கொல்லப்பட்ட இரக்கமற்ற பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பானவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்ற உறுதிமொழியை நிறைவேற்றுவதில் நாம் அர்ப்பணிப்புடன் உள்ளோம் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ம-4,7)

### அச்சுவேலி நகரிலுள்ள

# அழகு சாதன விற்பனை அங்காடியில் தீ விபத்து

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி நகர்ப் பகுதியில் அமைந்துள்ள அழகு சாதன விற்பனை நிலையமொன்றில் நேற்று மாலை திடீர் தீ விபத்தொன்று இடம் பெற்றுள்ளது.

தீப்பரவல் காரணமாக விற்பனை நிலையமானது பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நேற்று மாலை குறித்த விற்பனை நிலையத்தின் பின் பகுதியில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

இதனைக்கண்ணுற்ற அயல் கடை உரிமையாளர்கள் மற்றும் பொது மக்கள் இணைந்து தீயினைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர்.

யாழ்.மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினரும் தீயணைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

மின்னொழுக்குக் காரணமாகவே குறித்த தீ விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-4,7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ் தேசியம் மீதான பற்றினை பறை சாற்றியுள்ளது

## சுமந்திரன் சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

பிரிந்து நின்று எதிர்கொள்வதே உள்ளூர் அதிகார சபை தேர்தலில் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தின் அதிகரிப்புக்கும் இருப்புக்கும் வலிமை தரும் என்று அன்று நான் கூறுயது இன்று நிரூபணமாகியுள்ளது என தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவித்ததாவது,

தமிழ் தேசியத்தை வடக்கு கிழக்கில் வலிதாக்கி எமக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி.

நடைபெற்று முடிந்த தேர்தல் அநுர அலை என்று கூறப்பட்ட பொய் பரப்புரைக்கு முடிவு கட்டி தமிழ் தேசியத்தின் இருப்பை உறுதி செய்துள்ளது.

மாற்றம் என்ற அலைக்குள் மக்கள் அள்ளுண்டு விடுவர் என பெரும் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டுவந்த சூழலில் நாம் இம்முறை 58 சபைகளில் போட்டியிட்டு 40 சபைகளின் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றும் வகையில் பெருவெற்றி பெற்றுள்ளோம்.

இந்த வெற்றியானது தமிழ் தேசியத்தின்பால் மக்கள் கொண்டுள்ள நேசத்தை காட்டுகின்றது.

இந்நேரம் பல சபைகளில் ஆட்சியமைக்கும் தரப்பாக நாம் இருந்தாலும் அதற்கான பெரும்பான்மை பலத்தை சக தமிழ் கட்சிகள் வழங்கவேண்டிய அல்லது ஆதரவு கோர வேண்டிய தேவையும் இருக்கின்றது. காலச்சூழலின் நிலையை உணர்ந்து சக தமிழ் கட்சிகள் ஆதரவு வழங்கு வார்கள் என்ற நம்பிக்கையும் இருக்கின்றது.

எனவே தமிழ் மக்களின் தேசங்கள் தமிழ் தரப்பினரிடமே இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் மக்கள் உறுதியாகவே இருக்கின்றனர் என்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-33)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 400 | 400 | 400 | 450 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 200 | 190 | 240 |
| பச்சைமிளகாய் | 160 | 150 | 200 | 150 | 200 |
| தக்காளி | 950 | 900 | 1000 | 900 | 1000 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 280 | 300 | 250 | 200 |
| கோவா | 450 | 400 | 500 | 320 | 500 |
| கரட் | 800 | 900 | 1000 | 1000 | 800 |
| பூசணி | 200 | 220 | 200 | 200 | 240 |
| புடோல் | 200 | 250 | 300 | 250 | 300 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 70 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 100-300 | 250 | 120-300 | 300 |
| பெரிய வெங்காயம் | 120 | 150 | 130 | 110 | 120 |
| பாகற்காய் | 600 | 700 | 600 | 450 | 600 |
| வெண்டக்காய் | 300 | 250 | 200 | 250 | 450 |
| கருணைக் கிழங்கு | 350 | 300 | 250 | 250 | 300 |
| பயற்றங்காய் | 450 | 300 | 350 | 300 | 300 |
| லீக்ஸ் | 300 | 300 | 300 | 220 | 400 |
| பீற்றூட் | 550 | 600 | 600 | 450 | 600 |
| கறிமிளகாய் | 600 | 550 | 500 | 450 | 600 |
| முருங்கைக்காய் | 1600 | 2300 | 2000 | 1900 | 2000 |
| போஞ்சி | 750 | 850 | 600 | 450 | 800 |
| கத்தரிதம்புள்ள | 400 | 350 | 400 | -- | 400 |
| கீரை - 1 பிடி | 100 | 80-140 | 150 | 60 | 100 |
| தேசிக்காய் | 200 | 350 | 300 | 320 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 280 | 150 | 120-300 | 200-240 |
| இராசவள்ளி | 650 | 700 | 600 | 450 | 600 |
| வெங்காயப்பூ | -- | -- | 600 | -- | 600 |
| முள்ளங்கி | 150 | 160 | 200 | 120 | 400 |
| பொன்னாங்காணி | 120 | 60 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 | 100 |
| ஈரப்பலா | 150 | -- | 100 | | |


# பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடம் இருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பப்படிவங்களை சங்க வேலை நாட்களில் தலைமைக்காரியாலயத்தில் ரூபா 50/= செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் தலைவர், புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை. என்ற முகவரிக்கு 22.05.2025 ஆம் திகதிக்கு முன்னர் நேரில் அல்லது பதிவுத்தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

**01. பதவி - கணக்காளர்**

சம்பள குறியீட்டு இல :-104/ 09
சம்பள அளவுத்திட்டம் :-20200-250*10-260*10-25300
(கூ.ஊ.ஆ.சு.நி 02/2022) :- 242400-3000*10-10-31200*10-303600

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் கணக்காளர்/ உள்ளகக் கணக்காய்வாளர் கணக்குப்பதிவாளர் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/கூட்டுறவு ஊழியர் 11ஆவது சம்பளத்திட்டப்பதவியில் உள்ளகக் கணக்காய்வாளர்/ கணக்குப் பதிவாளர் கணக்கு் அல்லது கணக்காய்வு எழுதுனர் பதவியில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் கணக்கியலிலான டிப்ளோமா/ இதற்கு சமனான தகைமை/ மாகாண கூட்டுறவுப் பயிற்சி நிறுவனத்தினால்/ தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தினால் (NICD) நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி.

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு துறையில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்./அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு துறையில் ஆகக்குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம். க.பொ.த உயர்தரப்பத்திர பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு துறையில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/கணக்காய்வு தொடர்பான பதவியொன்றில் 04 ஆண்டு கால அனுபவம்.

**02. பதவி - கணக்குப்பதிவாளர்**

சம்பள குறியீட்டு இல :- 215/ 12
சம்பள அளவுத்திட்டம் :- 18820-170*10-185*10-22370
(கூ.ஊ.ஆ.சு.நி 02/2022):- 225840-2040*10-2220*10-268440

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத்திட்டப்பதவியில் கணக்குப் பதிவாளர்/ வெளிக்கள உத்தியோகத்தர்/ எழுதுநர்/ காசாளர் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்டப்பதவியில் எழுதுனர்/ காசாளர் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி./ க.பொ.த. உயர்தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தி

**03. பதவி - எழுதுனர்**

சம்பள குறியீட்டு இல :- 302/14
சம்பள அளவுத்திட்டம் :- 17900-155*10-165*10-21100
(கூ.ஊ.ஆ.சு.நி 02/2022) :- 214800-1860*10-1980*10-253200

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் எழுதுனர்/ காசாளர்/ கணனிப்பக்க உருவாக்குனர் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./
கூட்டுறவு ஊழியர் 16ஆவது சம்பளத்திட்டப் பதவியில் எழுதுனர் / காசாளர்/ கணனிப்பக்க உருவாக்குனர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் சித்தி./க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ்மொழி. கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தி.

**04. பதவி - கிளை முகாமையாளர்**

சம்பள குறியீட்டு இல :- 208/13
சம்பள அளவுத்திட்டம் :- 18360-160*10-170*10-21660
(கூ.ஊ.ஆ.சு.நி 02 / 2022):- 220320-1920*10-2040* 10-259920

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் எழுதுனர்/ காசாளர்/கணணி பக்க உருவாக்குனர் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./ கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் எழுதுனர்/ காசாளர் பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி./ க.பொ.த சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் சிங்களம்/தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கி 3 திறமைச்சித்தியுடன் கணிதம் உட்பட 06 பாடங்களுடனான சித்தி.

**பொது நிபந்தனைகள்**

1. வயது 16.05.2025ஆம் திகதிக்கு 18 வயதிற்கு குறையாதவர்களாகவும் 45 வயதிற்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
2. கல்வித்தகைமைகள், அனுபவம், வயது, வதிவிடத்தை உறுதிப்படுத்துதல், நற்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
3. நியமனத்தின் போது சுற்றுநிருபத்திற்கமைவாக ரொக்கபிணை செலுத்த தயாராக இருத்தல் வேண்டும்.
4. ஏனைய சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் அச்சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.
5. சங்க பணியாளர்களுக்கு வயதெல்லை கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

(சி-2916)

தலைவர், புலோலி ப.நோ.கூ.சங்கம், புலோலி கிழக்கு பருத்தித்துறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்கு நாள்...

கொண்டு சென்றபோது அவர் அங்கு உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளது. (ம-7,4,60)

## மின்னல்...

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக புதுக்குடியிருப்பு பிரதேச ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-7,4,299)

## உலக வங்கித்...

இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது முதலீடு, டிஜிட்டல் மயமாக்கல், சுற்றுலா, விவசாயம் மற்றும் பிராந்திய அபிவிருத்தியை மையமாகக் கொண்ட மூன்று வருடங்களுக்கான கூட்டாண்மை குறித்து உலக வங்கித் தலைவர் அஜய் பங்காவுடன் விரிவாகக் கலந்து

ரையாடியதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ம-7,4)

## கடலுக்கு...

காக இரு நபர்கள் கடலுக்குச் சென்றுள்ளனர்.

இவர்கள் மாலை வரை கரை திரும்பாத நிலையில் வடமராட்சி திக்கம் பகுதியில் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது. வழமையாகத் தூண்டில் தொழிலுக்காகச் செல்லும் நபர்கள் நண்பகலுக்கு முன்னரே கரை திரும்புவது வழக்கமானது.

இதனை அறிந்த பிரதேச மக்கள் பிற்பகல் 3 மணி போல் தொழிலுக்காகச்சென்றவர்களைக்கடலுக்குள் தேடியுள்ளனர். எனினும் அவர்கள் இன்னும் கரை திரும்பவில்லை. (ம-7,4)

## அரசுக்கு...

குறிப்பிடுகையில்,

அவமானங்கள், அச்சுறுத்தல்கள், சேறுபூசும் வார்த்தைகள், சதித்திட்டங்கள் மற்றும் சவால்களுக்கு மத்தியில் ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களித்து ஆதரவு வழங்கிய மக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நாட்டின் ஜனநாயகத்தை வலுப்படுத்த முன்வந்து தேர்தல் வெற்றிக்கு ஒத்துழைப்பை நல்கிய நாட்டின் அனைத்து இன மக்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்மையில் நடைபெற்ற பாராளுமன்ற மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களிலும் பெரும் மக்கள் ஆணைகளைப் பெற்ற தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், 6 மாதங்கள் என்ற குறுகிய காலத்தில் மிகப்பெரிய சரிவைச் சந்தித்துள்ளமையை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன. எனவே எதிர்க்கட்சியைச் சேர்ந்த சகல தரப்பினர்களையும் ஒன்றிணைத்து செயற்பட வேண்டும் என்ற செய்தியை நாட்டு மக்கள் இத்தேர்தலின் ஊடாக எமக்கு முன் வைத்துள்ளனர். ஜனாதிபதித் தேர்தலைக் கையாண்டது போலவே இந்த உள்ளூராட்சித் தேர்தலையும் ஜே.வி.பி கையாண்டது. தேர்தலுக்காக மதத்தைக்கூட அரசாங்கம் பயன்படுத்தியது.

நாட்டு மக்கள் அரசாங்கத்தின் பொய்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளனர். உண்மையான மக்கள் சேவையை முன்னெடுப்பதற்கான அங்கீகாரத்தை எதிர்க்கட்சிக்கு வழங்கியுள்ளனர். பொய்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து, பொய்களை முறியடித்து, உண்மையான பலம்வாய்ந்த மக்கள் சேவைக்காக எதிர்க்கட்சியைச் சேர்ந்த சகல தரப்புகளையும் ஒன்றிணைய வேண்டும் என்ற பொதுமக்களின் அபிலாஷையின் அடிப்படையில் இந்த சவாலான பொறுப்பிற்குத் தலைமை வழங்க ஐக்கிய மக்கள் சக்தி தயாராக உள்ளது.

ஜனநாயகத்தைப் பாதுகாப்பவர்களாக, நாங்கள் பொதுமக்களின் எதிர்பார்ப்புகளுக்கு தலைவணங்கி, எதிர்க்கட்சியைச் சேர்ந்த சகல தரப்பினர்களையும் ஒன்றிணைப்போம். அதன் ஊடாக வெளிப்படைத்தன்மை வாய்ந்ததும், கொள்கை ரீதியானதுமான சிறந்த மக்கள் சேவையை வழங்கவுள்ளோம். இதற்கான தலைமைத்துவத்தை ஐக்கிய மக்கள் சக்தி வழங்கும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்தார்.

(மற்றொரு செய்தி உள்ளே) (ம-7,4)

## முல்லைத்தீவில்...

பொக்கணையைச் சேர்ந்த ராஜசீலன் ராஜ்குமார் (வயது-27) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இது தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,4)

## இந்திய...

தாக்குதலை நடத்தியுள்ளது. பாகிஸ்தானும் இந்தியாவின் தாக்குதலுக்குப் பதில் தாக்குதல் நடத்திவருகின்றது.

இந்திய ஏவுகணைத் தாக்குதலில் பாகிஸ்தானில் ஏழு பேர் பலியான தாகப் பாகிஸ்தான் இராணுவம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, தனது இராணுவம் ஐந்து இந்திய விமானங்களைச் சுட்டு வீழ்த்தியதாகவும், சில இந்திய வீரர்கள் சிறைபிடிக்கப்பட்டதாகவும் பாகிஸ்தான் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் உரிய நேரத்தில் இந்தியாவுக்கு பதிலடி கொடுப்போம் என பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

இதேவேளை இந்தியா "ஒப்பரேஷன் சிந்தூர்" திட்டத்தின் ஒரு பகுதியாக பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு ஜம்மு-காஷ்மீரில் ஒன்பது இடங்களைக் குறிவைத்ததாக இந்திய ஆயுதப் படைகள் தெரிவித்துள்ளன. (ம-7,4)

(மேலும் செய்திகள் உள்ளே)

## யாழ்....

கள் அடங்கலாக 12 ஆசனங்களைப் பெற்றுள்ளது, இலங்கைத் தமிழரசுக் கட்சி போனஸ் ஆசனங்கள் அடங்கலாக 13 ஆசனங்களைப் பெற்றுள்ளது. தேசிய மக்கள் சக்தி போனஸ் ஆசனம் உட்பட 10 ஆசனங்களைப் பெற்றுள்ளது.

எனவே அறுதிப் பெரும்பான்மை பெறாத நிலையில் ஆட்சியமைப்பதானால் ஏனைய கட்சிகளுடன் கூட்டுச் சேர வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,4)

## மாதகலில்...

சேர்ந்த வீரசிங்கம் ரவிசந்திரராசா (வயது-59) என்ற திருமணமாகாத நபரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

உயிரிழப்புத் தொடர்பான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7,4)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



மஹஜன சம்பத — திகதி 2025.05.07 — சீட்டிழுப்பு இலக்கம் 5824 — R 1 8 9 0 4 7 — அத சம்பத R 9 0 4 7 — 0399

தன நிதானய — திகதி 2025.05.07 — சீட்டிழுப்பு இலக்கம் 1854 — G 48 59 60 78 G — 13003

மெகா பவர் — திகதி 07/05/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2172 — U 15 34 44 73 75

ஜய — திகதி 2025.05.07 — சீட்டிழுப்பு இலக்கம் 0092 — H 6 9 7 7

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4066 — சீட்டிழுப்பு திகதி 07.05.2025 — Y 07 21 26 73 — Y

ஹந்தஹன HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.05.07 — சீட்டிழுப்பு இலக்கம் 1133 — தனுசு 13 16 24 37 தனுசு — 77055 — 46

உத்தியோகபூர்வ முடிவுகள் — 07.05.2025 — வெற்றி வாரம் 532 — G — 8 2 7 2 8 2 — 54947 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.36.837.875.20

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2798 — சீட்டிழுப்பு திகதி 2025.05.07 — தினம் புதன்கிழமை — 01 02 59 61 V — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60,622,384.00

சனிதா — திகதி 07.05.2025 — வெற்றி வாரம் 4959 — 07 17 34 40 V — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,935,952.40 — 84799

ஜயோதா Jayoda — திகதி 2025.05.07 — வெற்றி வாரம் 2125 — 19 57 61 68 T — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 29,256,603.20

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4510 — சீட்டிழுப்பு திகதி 07.05.2025 — தினம் புதன்கிழமை — 23 29 38 61 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.7,489,672.20 — 233773

கப்ருக — Y 40 08 33 54 65 — 1974 — 07.05.2025 புதன்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட்

அத கோடிபதி ADA KOTIPATHI — புதன்கிழமை — வெற்றி வாரம் 2624 — சீட்டிழுப்பு திகதி 2025.05.07 — 10 44 48 69 I — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,741,130.40 — 162938


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-2923) 076 825 7716 (ஆகாஸ்)

# கூட்டணி...

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை காரியாலயத்தில் நேற்றுப் புதன்கிழமை (07) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி அமோக வெற்றி பெற்று அதிகளவான உள்ளூராட்சிமன்ற அதிகார சபைகளை கைப்பற்றியுள்ளது. ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலின் போது வழங்கிய ஒத்துழைப்பை இந்தத் தேர்தலிலும் வழங்கியதற்கு நாட்டு மக்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

தேசிய மக்கள் சக்தி மற்றும் அரசாங்கத்தின் மீது நாட்டு மக்கள் அதீத நம்பிக்கை கொண்டுள்ளார்கள். தேசிய மட்டத்தில் அதிகாரத்தைச் சிறந்த முறையில் செயற்படுத்துவதைப் போன்று பிரதேச மட்டத்திலான அரச நிர்வாகத்தையும் சிறந்த முறையில் செயற்படுத்துவோம்.

ஊழலற்ற அரசாங்கத்தை ஸ்தாபித்ததை போன்று ஊழலற்ற உள்ளூராட்சிமன்ற அதிகாரங்களையும் எம்மால் ஸ்தாபிக்க முடியும். ஒருசில பகுதிகளில் பெரும்பான்மை பலம் கிடைக்கப்பெறாமைக்கான காரணத்தை ஆராய்ந்து குறைகளை நிவர்த்தி செய்து முன்னோக்கிச் செல்வோம்.

பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களில் தனித்து பெரும்பான்மையுடன் ஆட்சியமைப்போம். மக்களால் புறக்கணிக்கப்பட்ட தரப்பினருடன் கைகோர்த்து உள்ளூராட்சிமன்றங்களை ஸ்தாபிக்க போவதில்லை. தோல்வியடைந்துள்ள தரப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைத்து உள்ளூராட்சி மன்றங்களை ஸ்தாபிப்பது சிக்கலானதே.

ஒருசில சுயேட்சைக்கு குழுக்கள் தேசிய மக்கள் சக்தியுடன் ஒன்றிணைவதற்குத் தயாராக இருக்குமாயின் அந்தத் தரப்பினரை ஒன்றிணைத்து பெரும்பான்மை பலமற்ற உள்ளூராட்சிமன்ற அதிகார சபைகளில் ஆட்சியமைக்கலாம். எவ்வாறாயினும் மாற்றுக் கொள்கை கொண்டுள்ள எதிர்த்தரப்பினருடன் ஒன்றிணையப் போவதில்லை என்றார். (ம-4,7)

(மேலும் ஒரு செய்தி உள்ளே)

50 ஆண்டுகால சேவையில்

E-Son's
மேன்மை
PARLOUR SERVICE

100 பேர் அமரக்கூடிய விசாலமான மண்டபம்

ஈ – சன்ஸ்

148, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2695 / 077 429 0613
(C-2907)

**ICT CLASSES**
Tamil & English Medium
Grade: 6,7, 8, 9 and 10,11
**Physical Classes**
>Theory (ICT Text Book & Work Book) >Unit Examination
>Practical on Computer >Model Papers
>Past Papers
(C-2918)
Contact: V.V.Moorthy(ICT & IT)
Tel: 077 746 9282

**வைத்தியம்**
வலிப்பு நோய்|கை விறைப்பு| நாட்பட்ட தலைவலி|
மூலம் | கழுத்து வலி | கால் பாத விறைப்பு |
முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி
Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி
தலைக்கு இரத்தம் போகாமை, வாதம்
நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள்
நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669
(1110)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 29 05 1959

மறைவு 09 04 2025

கடந்த 09.04.2025 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவி

அமரர் **திருமதி சதாசிவம் அகிலேஸ்வரி**

அவர்களின் சிவபதப்பேறு குறித்த வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை 09.05.2025 வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எம்மால் தனிப்பட்ட ரீதியில் அழைப்பிதழ்கள் தவறவிடப்பட்டிருப்பின் எமது இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று எமது நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். (C-2917)

கனகராயன்குளம் தெற்கு,
கனகராயன்குளம், வவுனியா.

குடும்பத்தினர்
076 261 2628

**காணி விற்பனைக்கு**
புன்னாலைக்கட்டுவன் சந்தியில் இருந்து சுன்னாகம் செல்லும் பிரதான வீதியோரமாக 300 அடி வீதி முகப்பாகக் கொண்ட 28 பரப்பு காணி உடனடி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு :
076 742 4301, 075 710 9639
(4124)

NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL
CERTIFICATE IN PERSONAL AND PROFESSIONAL DEVELOPMENT
&
CERTIFICATE IN ACCOUNTING APPLICATION SOFTWARE
JUNE INTAKE 2025 | DURATION 40 HOURS
INVESTMENT LKR 10,000 EACH COURSE
AFTER O/L's & A/L's
COMMENCE ON 14TH OF JUNE 2025
021 7534 807
Visit our Website
northernuni.lk apply@northernuni.com
(C-2919)

**கணக்கீடு**
A/L 2027 சனி 10 A.M
A/L 2026 புதிய அலகு
Paper Class வெள்ளி 3 Pm
உற்பத்திக் கிரயக்கூற்று சனி 11 A.M
A/L 2025 / Day ஆரம்பம்
காசுப்பாய்ச்சல் கூற்று சனி 8 A.M
A/L Day Class ஆரம்பம்
தனிப்பிரிவு கம்பனி வெள்ளி
S.தவா
• கடந்த வருடம் யா.மா.நிலை 01 மற்றும் தொடர் நிலைகள்...
• வருடம் தோறும் முன்நிலை பெறுபேறுகள்
DCM யாழ் நகர்
யாழ் வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகில்
077 239 5858
(4125)

**விசேட சலுகைகள்**
வெளிநாடுகளுக்கான 11Kg ற்கு மேற்பட்ட பொதிகளுக்கான 1Kg க்கான கட்டணம்
UK - 1380/= Australia - 2130/=
France - 1930/= Germany - 1880/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
திருமுருகன் பொதிகள் சேவை
321,K.K.S Road, Jaffna
077 755 4528
கிளைகள் : கொழும்பு, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மல்லாவி
(1111)

**உடனடி வேலை வாய்ப்பு**
நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
•கிளிநொச்சி •சுன்னாகம்
•சாவகச்சேரி •மானிப்பாய்
•நெல்லியடி •பருத்தித்துறை
•திருகோணமலை •வல்வெட்டித்துறை
•கோப்பாய் •புத்தூர்
•பண்டத்தரிப்பு •சங்கானை
•கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-2922)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org